# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி 09 ஞாயிற்றுக்கிழமை (26-10-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:332


## சுதந்திரமாக தொழில் புரிய அனுமதிக்கக் கோரி பருத்தித்துறை நகரில் நேற்று பேரணி, மறியல்

### மீனவர்கள் தாக்கப்பட்டதற்கும் கண்டனம்

வடமராட்சி,ஒக்.26

பருத்தித்துறை முனைப் பகுதியில் மீனவர்கள் பலர் படையினரால் தாக்கப்பட்டு மீன்பிடிப் படகுகள் சேதமாக்கப்பட்டமையைக் கண்டித்து சுதந்திரமாக தொழில்செய்ய அனுமதிக்கும்படி கோரியும் நேற்றுக் காலை பருத்தித்துறை நகரில் மறியல் மற்றும் ஆர்ப்பாட்டப் பேரணி இடம்பெற்றன.

பருத்தித்துறை முனை தோமையப்பர் ஆலய முன்றிலிலிருந்து காலை 9 மணிக்கு ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி கடற்கரை வீதி, மூன்றாம் குறுக்குத்தெரு, தும்பளைவீதி, மெத்தைக் கடைச்சந்தி வழியாக பிரதான வீதியை அடைந்து, போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவுக்கு முன்பாக உள்ள பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தை சென்றடைந்தது. சுமார் ஒன்றரை மணிநேரம் பிரதேச செயலக வாசலில் மறியல் போராட்டம் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டப் பேரணி மற்றும் மறியல் போராட்டத்தில் கலந்துகொண்ட ஆண்களும் பெண்களும் பல்வேறு சுலோக அட்டைகளை தாங்கியவாறு கோஷங்களை எழுப்பினர். பேரணியிலும், மறியல் போராட்டத்திலும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.கே.சிவாஜிலிங்கம், குருமார்கள், மீனவசங்க பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

"எங்கள் கடல் எங்களுக்கே" "இராணுவமே வெளியேறு", "கடலில் பாஸ் முறை வேண்டாம்" "கடலில் கால் கழுவ அனுமதி பெறுவதா?", "வீடு புகுந்து தாக்கிய இராணுவமே", "கடைகளை நாசமாக்கியது இராணுவமே", "குண்டாந்தடிக்கு அஞ்சமாட்டோம்", "சிறைச்சாலை

(16ஆம் பக்கம் பார்க்க)



பேரணியில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினர்

# மீனவர்கள் அச்சமின்றி தொழிலில் ஈடுபட தமிழ் பேசும் பொலீஸாரின் கண்காணிப்பு

## ஏற்பாடுகளைச் செய்யும்படி ஒஸ்ரின் பெர்னாண்டோ பணிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்26

**வடமராட்சி மீனவர்கள் இராணுவ அச்சுறுத்தல் இல்லாமல் தொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாகத் தமிழ்பேசும் பொலீஸாரை கண்காணிப்பில் ஈடுபடுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் இராணுவத் தளபதிக்கும் பொலீஸ்மா அதிபருக்கும் உத்தரவிட்டுள்ளார்.**

பருத்தித்துறை மீனவர்கள் தாக்கப்பட்டமை, அவர்களின் உடைமைகள் சேதமாக்கப்பட்டமை ஆகியன தொடர்பாக மாவை சேனாதிராஜா எம்.பி. பாதுகாப்பு அமைச்சுச் செயலாிடம் சுட்டிக்காட்டியிருந்தார்.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றும்-

வழமைபோல் அவர்கள் இன்று முதல் தமது தொழிலை எவ்வித அச்சுறுத்தலும் இன்றி மேற்கொள்ளக் கூடிய சூழலை ஏற்படுத்தவேண்டும் என்றும் -

சேனாதிராஜா தொலைபேசி மூலம் செயலிடம் கேட்டிருந்தார்.

இதற்குப் பதில் அளித்த செயலர் மாவை சேனாதிராஜாவுக்கு தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

★ இராணுவ அச்சுறுத்தல் இன்றி

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில் அடுத்தவாரம் அமெரிக்கா விஜயம்

அமெரிக்காவுக்கு மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 3ஆம் திகதி அங்கு புறப்பட இருக்கிறார்.

அமெரிக்கா ஜனாதிபதி ஜோர்ச் டபிள்யூ. புஷ் உட்பட முக்கிய தலைவர்களுடன் இரு நாட்டு உறவுகள் குறித்துப் பிரதமர் பேச்சுக்களை நடத்தவிருக்கின்றார். (ம-3-12)

## புதிய கைத்தொழில்களை ஆரம்பிக்க குடாநாட்டில் 20 லட்சம் வரை கடன்கள்

### கைத்தொழில் அபிவிருத்திச் சபை வழங்கும்

யாழ்ப்பாணம்,ஒக்.26

குடாநாட்டில் புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு 20 லட்சம் ரூபா வரையிலான கடன் வழங்கும் திட்டம் ஒன்றை கைத்தொழில் அபிவிருத்திச்சபை நடைமுறைப்படுத்த இருக்கின்றது.

சபையின் தலைவரான கலாநிதி பந்துல பெரேரா இதனைத் தெரிவித்தார்.

நாளை யாழ்ப்பாணம் வரவிருக்கும் அவர் தமது விஜயம் தொடர்பாக உதயனுக்கு தகவல் வெளியிடுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கான இலகுகடன் வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி வழங்கியுள்ளது. இந்நிதியிலிருந்து வர்த்தக வங்கி ஊடாக தெற்கில் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தை யாழ்ப்பாணத்திலும் நடைமுறைப்படுத்தும்படி அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும், ஜயலத் ஜயவர்த்தனாவும் என்னைக் கேட்டுக்கொண்டனர். இதன்படி இத்திட்டத்தை யாழ்ப்பாணத்திலும் நடைமுறைப்படுத்த முடிவு செய்துள்ளோம். நாளை யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் இத்திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட இருக்கின்றது.

எந்த வகையான கைத்தொழில்களை ஆரம்பிக்கலாம் என்ற ஆலோசனையையும் கடன் பெறுவதற்கான ஏற்பாடுகளையும் எமது சபை மேற்கொள்ளும். கடனுக்குரிய மீள் கொடுப்பனவை சபையே பெற்று வங்கிக்கு செலுத்தும். இக்கடனுக்கு மிகக் குறைந்த வட்டியே அறவிடப்படும்.

கைத்தொழில் அபிவிருத்திச் சபைத் தலைவராக இரு தடவைகள் யாழ்ப்பாணம் வந்தேன். பல உறுதிமொழி

(16ஆம் பக்கம் பார்க்க)

## அரசைக் கவிழ்க்கும் முயற்சி பற்றி சு.கட்சி-ஜே.வி.பி. நேற்று ஆராய்வு

கொழும்பு,ஒக்.26

ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கவிழ்க்கும் யுக்திகள் குறித்து சுதந்திரக்கட்சி மற்றும் ஜே.வி.பி. தலைவர்கள் நேற்றிரவு நீண்ட நேரம் ஆராய்ந்தனர் எனத் தெரியவந்தது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் ரில்வின் சில்வா மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

நேற்றிரவு 8.30 மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பு நேற்று நள்ளிரவு வரை தொடர்ந்தது என்றும் -

சந்திப்பில் ஏற்பட்ட இணக்கம் குறித்து நள்ளிரவுவரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்றும் - கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இருகட்சிகளும் இணைந்து பொது முன்னணி ஒன்றை அமைக்கும் முயற்சிகள் தோல்வி கண்டபோதும் -

அரசைக் கவிழ்க்கும் விடயத்தில் சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு வழங்கப் போவதாக ஜே.வி.பி. முன்னரே அறிவித்திருந்ததென்பது தெரிந்ததே. (ம-3)

## இடைக்கால நிர்வாக சபை பற்றிய புலிகளின் திட்ட வரைவு மு.காவுக்கும் வழங்கப்படும்

கொழும்பு,ஒக்.26

வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக விடுதலைப் புலிகள் எதிர்வரும் 31ஆம் திகதி அரசுக்கு சமர்ப்பிக்கவுள்ள வரைவை மறுதினம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கு நோர்வேத் தரப்பு கையளிக்கும் என்று அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக ஆராய்வதற்காக லண்டனுக்கு நேற்று புறப்பட முன்னர் இப்படி செய்தியாளர்களிடம் தெரிவித்தார் ஹக்கீம்.

அமைச்சர் தலைமையில் ஒன்பது பேர் கொண்ட குழு நேற்று லண்டனுக்குப் புறப்பட்டது.

விடுதலைப் புலிகள் எதிர்வரும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மினிபஸ் சாரதிக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம்,ஒக்.26

பண்ணாகம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இளைஞன் ஒருவனை மோதிக்கொன்றதாகக் கூறப்படும் மினி பஸ்ஸின் சாரதியை விளக்கமறியலில் வைக்கும்படி மல்லாகம் நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.

மூளாயைச் சேர்ந்த சின்னத்தம்பி சந்திரராசா (வயது27) என்ற இளைஞன் வேறொருவரின் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சமயம் பின்னால் வந்த மினி வான் மோட்டார் சைக்கிளை மோதிவிட்டு ஓடித்தப்பியது என்றும் -

கீழே விழுந்த அந்த இளைஞன் அந்த இடத்திலேயே உயிரிழந்தார் என்றும் - விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. (16ஆம் பக்கம் பார்க்க)

## மலையக மக்கள் முன்னணியுடன் தமிழ்ச்செல்வன் இன்று சந்திப்பு!

யாழ்ப்பாணம்,ஒக்.26

வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகள் தயாரித்துள்ள வரைவு குறித்து மலையக மக்கள் முன்னணித் தூதுக்குழு விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் இன்று பேச்சு நடத்த இருக்கின்றது.

முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் இன்றைய சந்திப்பில் கலந்துகொள்வர்.

நேற்று மாலை வன்னி வந்து சேர்ந்த அமைச்சர் சந்திரசேகரன் சந்திப்புக் குறித்து விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாவட்ட தேசிய எழுச்சி பேரவையின் இரண்டாவது சங்கம நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட, கோட்ட, பிரதேச, ஊரக பேராளர்களுக்கான இரண்டாவது சங்கமம் இன்று காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் திணைக்களத் தலைவர்கள், துறைசார் நிபுணர்கள், துறைசார் விடயப் பொறுப்பாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

கோட்ட ரீதியாகவும், மாவட்ட ரீதியாகவும் முன்வைக்கப்பட இருக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் இதன்போது தீர்வுகளைத் தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ந்து பேராளர்களுடனான பகிர்வுகளும், பிரச்சினைகளுக்கான தீர்மானங்களும் துறைசார் வல்லுநர்களின் கருத்துரைகளும் இடம்பெறவுள்ளன.

அரசியல் விழிப்புணர்வு மற்றும் சமூக, பொருளாதார மேம்பாடுகளை முன்னெடுத்துச் செயற்படுத்தும் தேசிய எழுச்சிப் பேரவையின் குறிக்கோளை நிறைவேற்ற அனைவரையும் இந்தச் சங்கமத்தில் கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட எழுச்சிப் பேரவையினர் கேட்டுள்ளனர். (ம-6)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## கனேடிய பிரதமர் மீது ஊழல் குற்றச்சாட்டு!

ரொறன்ரோ,ஒக்.26

கனேடிய பிரதமர் ஜீன் கிரிட்டின் மீது இப்போது ஊழல் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அரச பணம் 10 கோடி டொலர் வீணாக்கப்பட்டுள்ளதாகவும் விமானங்கள் வாங்கியதில் முறைகேடுகள் நடந்திருப்பதாகவும் நாட்டின் கணக்குத் தணிக்கைக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கை மீதான விவாதம் அடுத்த மாதம் 25ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெறும். அப்போது பிரதமரின் பதவி ஆட்டம் காணும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில், ஆளும் லிபரல் கட்சியின் வருடாந்த மாநாடு அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடக்க இருக்கிறது. பிரதமர் ஜீன் கிரிட்டீன் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களும் தெரிவிக்கப்பட்டுவருவதனால் அந்த மாநாட்டின் போது அவர் தனது பதவியை இராஜினாமாச் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

## பூமியின் வெப்பநிலை அதிகரிப்பு!

லண்டன்,ஒக்.26

பூமியின் வெப்பநிலை 10 ஆண்டுகளுக்கு 1 டிகிரி என்ற வீதத்தில் அதிகரித்து வருவதாக அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பூமியின் வெப்பநிலை அதிகரித்து வருவது பற்றி விஞ்ஞானிகள் ஏற்கனவே ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றனர். தட்ப வெப்பநிலை மாற்றம், பூமியின் வெப்ப அதிகரிப்புக் காரணமாக ஆர்ட்டிக் கண்டத்தில் உறைபனி உருகுதல், அதனால் கடல்மட்டம் அதிகரித்தல் போன்ற செயற்பாடுகள் பற்றியும் அவற்றால் ஏற்படப் போகும் அபாயம் பற்றியும் தற்போது நாஸா விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

இந்த ஆய்வில் பூமியின் வெப்பநிலை 10 ஆண்டுகளுக்கு ஒரு டிகிரி செல்சியஸ் என்ற ரீதியில் அதிகரிப்பதாக அவர்கள் கணக்கிட்டுள்ளனர். இதன் மூலம் பூமிக்கு ஆபத்து நாளுக்கு நாள் அதிகரிப்பதாக அவர்கள் எச்சரித்துள்ளனர். (ம)

## ஈராக்கை சீரமைக்க உலக நாடுகள் நிதி உதவி

மட்றிட்,ஒக்.26

போரினால் சீரழிந்துள்ள ஈராக்கை மீளக்கட்டியெழுப்புவதற்கு சுமார் 4லட்சத்து 75ஆயிரம் கோடி ரூபாய் வழங்க உலக நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

ஈராக்கை மறுசீரமைக்கும் பணிக்கான நிதி திரட்டும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதனையொட்டி நன்கொடையாளர்களின் மாநாடு ஸ்பெயின் தலைநகர் மட்றிட்டில் நடைபெற்றது.

2 நாள்கள் நடைபெற்ற இந்த மாநாட்டில் 77 நாடுகள் கலந்துகொண்டன. 4 லட்சத்து 75 ஆயிரம் கோடியை நன்கொடையாக வழங்க அவை முன்வந்தன. இதில் அமெரிக்கா 2 கோடி வழங்குகின்றது. (ம)

## அமெரிக்க கருத்தை வடகொரியா பரிசீலிக்கும்

சியோல்,ஒக்.26

வடகொரியா தனது அணுவாயுதத் திட்டத்தைக் கைவிடுவதற்குப் பதிலாக பாதுகாப்புக் குறித்த உத்தரவாதத்தை வழங்குவதற்குத் தயார் என்று அமெரிக்கா தெரிவித்துள்ள கருத்தைப் பரிசீலிப்பது குறித்து ஆலோசிப்பதற்குத் தயாராகி வருவதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

வடகொரியா தனது அணுவாயுதத் திட்டத்தைக் கைவிட்டால் அமெரிக்கா அதனைத் தாக்காது என்று எழுத்துமூல உத்தரவாதத்தைத் தர அமெரிக்கா தயார் என்று கடந்த வாரம் அதிபர் புஷ் தெரிவித்திருந்தார்.

## நேபாளத்தில் ஏழு பொலீஸார் கைது!

நேபாளத்தின் பாங்கி மாகாணத்தில் 2 சிறுமிகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய 7 பொலீஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த இரு சிறுமிகளும் கூலி வேலை செய்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த போது பொலீஸாரால் பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஒவ்வொருவருக்கும் தலா 12 ஆண்டுகள் தண்டனை கிடைக்கும். வல்லுறவில் ஈடுபட்டவர்களின் சொத்தில் பாதியையும் அந்தச் சிறுமிகளுக்குக் கொடுக்கவேண்டியிருக்கும். (ம)

# அமெரிக்க ஹெலி ஈராக்கில் நேற்று சுட்டுவீழ்த்தப்பட்டது!

பக்தாத்,ஒக்.26

மத்திய ஈராக்கிய நகரான திக்ரிட்டிற்கு அருகே அமெரிக்க ஹெலி ஒன்று நேற்று சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார் என்று நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

இரு ஹெலிகள் பறந்து கொண்டிருந்த சமயம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இரண்டாவதாகப் பறந்துகொண்டிருந்த ஹெலி தாக்குதலுக்கு இலக்காகி தரையில் வீழ்ந்தது. அதன் மீது ஆர்.பி.ஜி. தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

சுடப்பட்ட ஹெலி பயிர்செய்கை நிலப்பகுதியிலேயே வீழ்ந்ததாக நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர். அந்தப் பகுதியில் இருந்து புகை மேற்கிளம்புவதை செய்தியாளர்களும் நேரில் கண்டுள்ளனர்.

வீழ்ந்த ஹெலியில் எத்தனை பேர் இருந்தனர் என்று உடனடியாகத் தெரியவரவில்லை. ஹெலி வீழ்ந்தது பற்றி அமெரிக்க அதிகாரிகள் நேற்று கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

அமெரிக்காவால் பதவி கவிழ்க்கப்பட்ட அதிபர் சதாம் ஹுசைனுக்கு அதிக ஆதரவு இருக்கும் பகுதி திக்ரிட். அங்கு அமெரிக்க இராணுவத்தினருக்கு எதிராக ஒவ்வொரு நாளும் பல்வேறு தாக்குதல்கள் இடம்பெற்ற வண்ணமே இருக்கின்றன.

சதாமின் ஆதரவாளர்கள் பலர் அங்கு அமெரிக்கப்படைகளுக்கு எதிரான தாக்குதல்களை திட்டமிட்டு வழிநடத்தி வருவதாக நம்பப்படுகின்றது.

அமெரிக்க பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பௌல் வொல்போவிஸ் மூன்று நாள் விஜயமாக ஈராக்குக்கு வந்துள்ளார். அவர் நேற்று சனிக்கிழமை காலை திக்ரிட் நகரில் உள்ள அமெரிக்கத் தளத்துக்கும் விஜயம் செய்திருந்தார். அவர் அங்கிருந்து புறப்படுவதற்கு சில மணிநேரங்கள் முன்னதாகவே ஹெலி சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. அவரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கக்கூடும் என்றும் நம்பப்படுகின்றது.

இதற்கு முன்னர் கடந்த ஜூன் மாதம் 12ஆம் திகதி அமெரிக்க அபாச்சி தாக்குதல் ஹெலி ஒன்று மேற்கு ஈராக்கில் சுட்டு வீழ்த்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சதாமின் வீழ்ச்சிக்குப் பின்னர் அவரது படைகளின் கட்டுப்பாட்டில் இருந்த பெரும் எண்ணிக்கையான விமான எதிர்ப்பு ஏவுகணைகளுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை என்று அமெரிக்கப் படையினர் கூறுகின்றனர். அந்த ஏவுகணைகள் மூலம் அமெரிக்க விமானங்கள் தாக்கப்படக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (ம)



ரஷ்யாவின் தென்பகுதியிலுள்ள சுரங்கத்தில் திடீரென வெள்ளம் ஏற்பட்டதால் 46 சுரங்கத் தொழிலாளர்கள் அதற்குள் சிக்கிக்கொண்டார்கள். அவர்களை மீட்கும்பணி நேற்று முழுநாளும் இடம்பெற்றது. சுரங்கத் தொழிலாளி ஒருவர் (மத்தி) மீட்புப் பணியாளர்களால் மீட்டுக்கொண்டுவரப்படும் காட்சி

## ஆப்கானின் சிலபகுதிகளில் மீண்டும் தலிபான்கள் அதிகாரம் ஏற்படுகிறது

### ஐ.நா. அதிகாரிகள் தெரிவிப்பு

காபூல்,ஒக்.26

ஆப்கானிஸ்தானின் சில பகுதிகளில் தலிபான்கள் மீண்டும் தமது அதிகாரங்களை நிலைநிறுத்தி வருவதாக அங்குள்ள ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் உள்ள பல பாதுகாப்புப் பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை என்று ஐ.நா. பாதுகாப்புச் சபையில் கருத்துத் தெரிவித்த ஆப்கான் அமைதிப் படையின் நடவடிக்கைத் தலைவர் கூறினார்.

"கந்தகார் மற்றும் பக்டியா மாநிலங்களின் எல்லையோரப் பகுதிகளில் உள்ள மாவட்டங்கள் பலவற்றில் தலிபான்கள் மீண்டும் தமது அதிகாரத்தை நிலைநிறுத்தி வருகின்றார்கள்" - என்று அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், ஆப்கானிஸ்தானுக்கு மேலும் 450 படையினரை அனுப்பிவைப்பதற்கு ஜேர்மனி இணங்கியுள்ளது. அவர்கள் நாட்டின் வடக்கு நகரங்களில் கடமையில் ஈடுபடுவார்கள்.

ஆப்கானிஸ்தானில் தற்போது 4 லட்சம் ஆயுததாரிகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஹமிட் ஹர்சேயின் அரசு இருவருடங்களில் 2 லட்சம் பேரிடம் இருந்து ஆயுதங்களைக் களைவதற்குத் திட்டமிட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணம் உள்ளன.

ஆயுதக் களைவு நடவடிக்கைக்கு ஐ.நா. உதவிகளை வழங்கி வருகின்றது. தமது ஆயுதங்களைக் கையளிப்பவர்களுக்கு உணவுப் பொருள்களும் ஒரு தொகைப் பணமும் வழங்கப்படுகின்றது. ஆயுதக் கையளிப்பை ஊக்குவிப்பதற்காக இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் தலிபான்களின் செயற்பாடுகள் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் இப்போது சில மாவட்டங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமளவுக்கு அவர்களின் செயற்பாடுகள் முன்னேறியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## நயாகரா நீர்வீழ்ச்சியில் குதித்து உயிர் பிழைத்த அதிசய மனிதன்!

உலகின் மிகப்பெரிய நீர்வீழ்ச்சியான நயாகராவில் மிதவை சாதனம் எதுவுமின்றி குதித்து உயிர்பிழைத்த அதிசய மனிதனை வரலாறு முதல் முதலாகக் கண்டுள்ளது.

நீர்வீழ்ச்சியில் கடந்த திங்கட்கிழமை முதுகில் மட்டும் கட்டப்பட்டிருந்த துணியுடன் தலைகீழாக குதித்தார் அந்த நபர். அதன் பிறகு பள்ளத்தாக்கில் உள்ள பாறை மீது நீரிலிருந்து வெளிப்பட்டு அவர் ஏறி அமர்ந்தார் என்று இதனை நேரில் பார்த்தவர்கள் கூறுகின்றனர்.

இதுபோன்று ஒரு மனிதன் அபாயகரமான நீர்வீழ்ச்சியில் குதித்ததைப் பார்த்து அதிர்ச்சியுற்றேன். அவரோ அமைதியாக இருந்தார் என்கிறார் அவர். இச்சம்பவத்துக்குப் பின் அங்கு வந்திருந்த சுற்றுலாப்பயணிகள் நீர்வீழ்ச்சியில் குதித்த மனிதனைப் படம் பிடித்தனர்.

ஆனால், நயாகராவில் பாதுகாப்பின்றி குதித்தமை குற்றமெனக் கூறிய பொலீஸார் அவரைக் கைது செய்து கொண்டு சென்றதை உள்ளூர் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று ஒளிபரப்பியது.

அந்த மனிதன் குதித்தது உண்மைதான். இதில் கபட நாடகம் ஏதுமில்லை. இருப்பினும் அவர் பெயரை வெளியிடவோ, நீர்வீழ்ச்சிக்கு எதற்காகச் சென்றார் என்பதைக் குறிப்பிடவோ விரும்பவில்லை என்று பொலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ரஷ்யாவின் மிகப்பெரிய பணக்காரர் மோசடிக் குற்றச்சாட்டில் கைதானார்



மிக்கைல் கோடொர்வஸ்கி

மொஸ்கோ,ஒக்.26

ரஷ்யாவின் மிகப்பெரிய பணக்காரர்களுள் ஒருவரும் எண்ணெய் வர்த்தகருமான யுகோஸ் மிக்கைல் கோடொர்வஸ்கி நேற்று ரஷ்யப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் மீது வருமானவரி ஏய்ப்பு உட்பட 6 கிரிமினல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

சைபீரிய விமான நிலையத்தில் வைத்து அவர் நேற்று திடீரெனக் கைது செய்யப்பட்டார். அவரது கைது ரஷ்யாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கோடொர்வஸ்கியே ரஷ்யாவின் மிகப்பெரிய பணக்காரர் என்று நம்பப்படுபவர். நேற்றே அவர் குற்றவியல் நீதிமன்றில் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டார்.

வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தால் அனுப்பப்பட்ட அழைப்பாணையை அவர் உதாசீனம் செய்தமையாலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

அவருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணைக்கு அவர் வர்த்தக விடயமாக பயணமாகி விட்டதாக அவரது நிறுவனம் நீதிமன்றத்துக்குப் பதில் அனுப்பி இருந்தது.

கடந்த ஜூலை மாதத்திலேயே கோடொர்வஸ்கியின் அலுவலகங்களில் பொலீஸார் தேடுதல்களை நடத்தியிருந்தனர். அதன் பின்னரே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

1994இல் மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காக கோடொர்வஸ்கியின் எண்ணெய் நிறுவனம் ஒன்றின் பிரதம நிதியாளர் நீதிமன்ற விசாரணைகளை எதிர்கொண்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## பாகிஸ்தானுடன் நல்லுறவு இந்தியா 12 அம்சத்திட்டம்!

சென்னை,ஒக்.26

பாகிஸ்தானுடன் நல்லுறவை ஏற்படுத்தும் முயற்சியாக 12 அம்சத் திட்டம் ஒன்றை இந்தியா அறிவித்துள்ளது.

பிரதமர் வாஜ்பாய் தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பிற்கான அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட இத்திட்டத்தை வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா செய்தியாளர்களிடம் அறிவித்தார்.

★ மும்பைக்கும், கராச்சிக்கும் இடையே படகுப் போக்குவரத்தை ஆரம்பித்தல்,

★ பாகிஸ்தானைச் சேர்ந்த மேலும் 20 நோய்வாய்ப்பட்ட குழந்தைகளுக்கு இந்தியாவில் மருத்துவ உதவிகளை அளிப்பது.

★ தூதரக அலுவலர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்துவது,

★ இரு நாடுகளுக்கும் இடையே ரயில் மற்றும் விமானப் போக்குவரத்தை மீண்டும் தொடங்குவது,

★ எல்லைப் பகுதியில் இரு இராணுவங்களுக்கும் இடையே துணைத் தளபதிகள் மட்டத்தில் நடவடிக்கை பரிமாற்றம் செய்துகொள்வது போல, அரபிக்கடல் பகுதியில் இரு நாடுகளின் கடலோர காவற்படைகளுக்கு இடையே பரிமாற்றங்களை ஆரம்பிப்பது மற்றும் 12 அம்சத் திட்டங்களை இந்தியா அறிவித்திருக்கிறது.

இதுகுறித்து இந்தியாவிற்கான பாகிஸ்தான் தூதர் அஜீஸ் அஹமது கானுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஒ)

| | | | |
|---|---|---|---|
| | ரா. | | சனி |
| செவ். | இராசிச் | | |
| | சக்கரம் | | வியா. |
| | | சூ. பு. வெ. கே. சந். | |

# இந்த வார இராசி பலன்

## 26.10.2003 - 01.11.2003

### மாற்றம்:

மாற்றம்: 26.10.2003இல் சுவாதி துலாத்தில் சந்திரன் நிற்கும். 30.10.2003இல் விருச்சிக ராசியில் வெள்ளி மாறும்.

சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும். மீண்டும் புதிய திசை திரும்பும். தெற்கில் அரசியல் குழப்பங்களைச் சில அரசியல்வாதிகள் தூண்டி விட்டபடி இருப்பார்கள். இந்தியாவில் வடக்கில் பதற்றநிலை உருவாகும். அழிவுகள் தொடரும். ஈராக், ஈரானில் அழிவுகள் தொடரும். அமெரிக்கா, பிரிட்டனின் வலிமை அதிகரிக்கப்படும். பசுபிக், இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் காற்றழுத்தம் - மழை வீழ்ச்சியை அதிகரிக்கச் செய்யும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

போட்டிகள் அதிகரிக்கும். அயலவர்கள் விரோதிப்பர். மறதியால் இழப்புவரும். இனஜனங்களின் கொண்டாட்டங்கள் ஏற்படும். வரவுக்கு மீறிய செலவுகள் அதிகரிக்கும். களைப்பு, சளித்தொல்லை, உஷ்ணபீடைகள் கொடுக்க இடம் உண்டு. பிரயாணங்களைத் தவிர்க்கவும் அல்லது இழப்புக்கள் வரும். வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி.*

### இடபம்

சாதியை - பொருளை வைத்துக் கொண்டு மனித மனங்களை கணக்கிட முடியாது. மனிதர்களை மனிதர்கள் கௌரவித்து, வாழத் தெரியாதவர்களை புறக்கணித்து விலகி நடப்பதே மேலாகும். உறுதியான செயற்பாடுகள் தொழில்ஸ்தானத்தில் கலக்க சம்பவங்கள் வரும். எதிர்ப்பாலாருடன் நிதானமாக இருக்கவும். நாரிநோ, தலைவருத்தங்கள் வர இடமுண்டு. புதியவர்களன் உதவிகள் கிடைக்கும். மருந்துவம், குருத் துறையினர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வெள்ளி.*

### மிதுனம்

பழையன கழிந்து புதியன உறவுகொள்ளும். அவசரத்தில் தவறுகள் நடக்க இடமுண்டு. தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகள் உதவி தருவர். மாணவர்களுக்கு புதிய கல்விச்சிறப்பு வரும். இடமாற்றங்களால் நன்மைகள் கிடைக்கும். வியாபாரிகள், செய்தி தொடர்பானவர்கள் நன்மை அடைவர். புதிய திட்டங்கள், கட்டட வேலைகளை தாமதப்படுத்தவும் அல்லது இழப்புக்கள் வரும்.

*அதிர்ஷ்டநாள்: புதன்.*

### கடகம்

திட்டமிட்ட செயற்பாடுகளால் வெற்றி வரும். பொருள் வரவுக்கள் அதிகரிக்கும். வீட்டிலுள்ளவர்களுக்கு நன்மைகள் நடக்கும். இடமாற்றங்களால் புதிய நட்புகள் வரும். மேலதிகாரிகள் சகஊழியர்களின் உதவிகள் கிடைக்கும். மாணவர்கள் நன்மை அடைவர். தூரதேசச் செய்திகள் மனத்தென்பைக் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன்.*

### சிங்கம்

நன்மை செய்து உண்மைப்படி நடப்பவர்களுக்கு கடவுள் பல சிறப்புக்களைக் கொடுப்பார். மனிதர்களின் பேதங்களால் இறைவனின் அன்பை அடைய முடியாது. அன்புள்ளவர்களின் உதவிகள் கிடைக்கும். பொருள் இழப்பு, செலவுகள் வரும் நிதானமாக இருக்கவும். பிறருக்கு கொடுத்தது வராத காலமாகும். குருத்துறை, வியாபாரத்துறையினர்களுக்கு நல்ல மாற்றங்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன்.*

### கன்னி

பொறுமை வேண்டும். பொருள் வரும். ஆஸ்பத்திரிச் செலவுகள் கொடுக்கும். அடிக்கடி பிறர்மீது சீறிப்பாய வேண்டி வரும். நாரிப்பிடிப்பு, சளித்தன்மை கொடுக்கும். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். தூரத்துச் செய்திகள் வரும். செய்தித்துறையினர் நன்மை அடைவர். மாணவர்களுக்குப் போட்டிகள் வந்து மனம் குழம்புவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், வெள்ளி.*

### துலாம்

தொழிலில் முன்னேற்றமும் பொருள் வரவும் கொடுக்கும். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். புதிய சோதனை, புதிய திட்டங்களை உருவாக்க இடம் உண்டு. முன்னர் திட்டமிட்ட தொழில் செயற்பாட்டில் வெற்றி வரும். சளி, நாரிநோ, சளி வருத்தம் கொடுக்கும். வியாபாரத்துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன், வியாழன்.*

### விருச்சிகம்

அட்டமத்துச்சனி உடல், உள நிலைத் தாக்கங்களைக் கொடுக்கும். இடமாற்றங்கள் ஏற்படும். அயலவர்களுடன் வாக்குவாதப்பட நேரிடலாம். கொடுக்கல், வாங்கலில் அவதானமாக இருக்கவும். எதிர்பாலாருடன் அபிப்பிராயபேதம் வரலாம். பொருள் செலவுகள் அதிகரிக்கும். செய்தி, வியாபாரம், இரும்புத் துறையினர் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளி.*

### தனுசு

பொருளால் வேதனை வரும். கொடுத்தது வராது. தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்கள் உதவி செய்வர். இடமாற்றங்களால் நன்மைகள் அதிகரிக்கும். நாரிநோ, சிறுவிபத்துக்கள் வரலாம். கவனமாக இருக்கவும். மாணவர்களுக்கு பிறரின் உதவிகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளி.*

### மகரம்

சமாதானமாக வாழ யோசிக்கும் உங்களுக்கு போராட்ட உணர்வுகளைத் தூண்டும் அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் வெறுப்பைத்தான் தரும். இடமாற்றங்கள், செயற்பாடுகளின் மந்தநிலையில் இழப்புக்கள் ஏற்படும். தொழில்ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் வெறுப்புக்கள் வரும். கால் விறைப்பு, சளி வரும். காணி பூமியில் செலவு வரும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். வியாபாரிகளுக்கு மாற்றங்கள் ஏற்படும். மாணவர்கள் ஏமாற்றம் அடைய இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி.*

### கும்பம்

புதிய திட்டங்கள் வெற்றி தரும். பிரயாணம், இடமாற்றங்கள் நன்மை தரும். புதிய நண்பர்கள் உதவி செய்வர். குடும்பத்தினரின் நன்மைகளுக்காக ஓடியாடித் திரிந்து செயற்படுவீர்கள். வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். தோட்டத்துறையினர், வியாபாரிகள், தொழில்நுட்பத் துறையினர்களுக்கு நன்மை அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன்.*

### மீனம்

கலகலப்பான காலமாகும். வீட்டுச் செலவுகள் வரும். கால்வருத்தங்கள் கொடுக்கும். பிரயாணங்கள் தடைப்படும். புதியவர்கள் வருகை தருவர். புதிய தொழில் தொடங்குவதற்கான சிந்தனை ஏற்படும் ஆனால் சிறிது காலம் பொறுத்து செய்வதே சாதகமாக அமையும். சிலருக்கு பொருள் வரவுகள் தூரத்திலிருந்து கிடைக்கும். வியாபாரிகள், குருத்தொழில் செய்பவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும். மாணவர்களுக்கு இடமாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி.*

**மகாதேவா ஜோதிடம்**



பருத்தித்துறை முனைச் சம்பவத்தைக் கண்டித்து வடமராட்சியில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியில் எடுக்கப்பட்ட படங்கள். பேரணியில் கலந்துகொண்டோரை முதலாவது படத்திலும், பேரணியின் முடிவில் பருத்தித்துறை பிரதேச செயலரிடம் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச செயலாளரும், கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலக பிரதிநிதியிடம் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவரும் மகஜர்களைக் கையளிப்பதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள் : கரவெட்டிச் செய்தியாளர்)

### யாழ். கல்வி வலயத்தின் அனுசரணையுடன்

## ஐந்து பாடசாலைகளில் புலமைப்பரிசில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ். கல்வி வலயத்தின் அனுசரணையுடன் மேல்மாகாண ஆசிரிய ஆலோசகர் த.அம்பிகைபாகன் இலவசமாக நடத்தும் புலமைப்பரிசில் கருத்தரங்கு நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் முதலாம் திகதி வரையும் யாழ். மாவட்டப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் இந்தக் கருத்தரங்கு நடைபெறும்.

கருத்தரங்கு நடைபெறவுள்ள பாடசாலைகளின் பெயர் விவரம் வருமாறு:-

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, 29ஆம் திகதி புதன் கிழமை யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை, 30 ஆம் திகதி வியாழக் கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, 31ஆம் திகதி வெள்ளிக் கிழமை புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி, முதலாம் திகதி சனிக்கிழமை சென்.ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.

இந்தக் கருத்தரங்கில் குறிப்பிட்ட பாடசாலைகளின் மாணவர்கள் மட்டுமல்லாது, ஏனைய அயல் பாடசாலைகளின் மாணவர்களும் கலந்துகொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.(எ-10)

### அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.26

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும், முன்னாள் ஆசிரியருமான கவிமாமணி மகாவித்துவான் ந.வீரமணிஐயரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3மணிக்கு கலாநிதி எஸ்.கே.சண்முகநாதன் தலைமையில் கல்லூரியின் வாகீசர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-10)

### ஆண்டுவிழா நிகழ்வு

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் 83 ஆவது ஆண்டு விழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு ஞானபாஸ்கரோதய சங்க மண்டபத்தில் கந்தையா அன்னலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி கலந்துகொள்வார். (எ-7)

## இலவச கணனிப் பயிற்சி நிலையம் கொக்குவிலில் நேற்றுத் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.26

மக்கள் நலன்புரிச் சங்கமும், படையணிகளும் அமைப்பின் கணனிப்பயிற்சி நிலையம் நேற்றுக் காலை ஆடியபாதம் வீதி, கொக்குவில் என்னும் முகவரியில் அமைந்துள்ள அந்த அமைப்பின் பணிமனையில் திறந்து வைக்கப்பட்டது.

நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் இப்பயிற்சிநிலையத்தை திறந்து வைத்தார். முன்னதாக, மக்கள் நலன்புரிச் சங்கத்தின் கொடியை அதன் தலைவர் இ.சற்குணநாதன் ஏற்றிவைத்தார். மங்கள விளக்கை சங்கத்தின் ஆலோசகர் எஸ்.கோபாலமூர்த்தி, மாவட்ட உதவி ஆணையாளர் எஸ்.சதீஷ் ஆகியோர் ஏற்றிவைத்தனர். பின்னர் மக்கள் நலன்புரிச்சங்கமும், படையணிகளும் அமைப்பின் சேவைக்காலத்தில் மறைந்த தொண்டர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

(எ-8)

### கிரிக்கெட் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம்,ஒக்.26

இலங்கை மென்பந்து கிரிக்கெட் அமைப்பு நடத்தும் மாவட்ட மட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் கொய்யாத்தோட்டம் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒன்பது கழகங்கள் பங்குபற்றுகின்றன. (எ-9)




அரும்புகளைக் காக்க

அரும்புகளுக்கு உதவுவோம்.

கணக்கு இல: 5-21-2022 431-4

(இலங்கை வங்கி, மேற்றக்கிளை)

அரும்புகள் சிறுவர் நிதியம்

யாழ். மருத்துவ மாணவர் ஒன்றியம்

021-222-2134

0777-678051

## கண்ணீருடன் கரைந்த ஓராண்டு...



| அன்னைமடியில் | மண்ணின் மடியில் |
|---|---|
| 18 - 05 - 1947 | 28 - 10 - 2002 |

### அமரர் நடராஜா வேலாயுதபிள்ளை

ஆயிரம் சொந்தங்கள் அவனியில் இருந்தாலும்
அப்பா என்றழைக்க நீங்களில்லையே!
ஆறுதல் வார்த்தைகள் எத்தனைதான் கேட்டாலும்
அப்பாவின் பிரிவுத்துயர் ஆறிவிடக்கூடுமோ.

*27, விதானையார் வீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.* (24065) (25)

நாளும் உம் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 19 - 11 - 1959 | 26 - 09 - 2003 |

### திருமதி சாரதாதேவி ஈஸ்வரோதயம (ரதி)

இன்று (26.10.2003) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு உதவிகளைப் புரிந்தவர்களுக்கும் தொலைபேசி. அஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தோர்களுக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆ.ஈஸ்வரோதயம் (கணவர் - C.E.B. சுன்னாகம்),
ஈ.சனோஜன், ஈ.டினோசன் (பிள்ளைகள்)
(கொக்குவில் இந்துக் கல்லூரி).

நந்தாவில்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(34-15-19-21) (24030)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 - 11 - 1910 | 20 - 10 - 1998 |

அமரர்
### கந்தப்பிள்ளை வல்லிபுரம்

திதி:- 26.10.2003

ஐம்பெருங்குரவராய் எம்மை அரவணைத்த அன்பு அப்பாவே!
ஐந்து ஆண்டுகள் ஆனபோதும் ஆறவில்லை எம் துயர்

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பாடசாலையடி,
நவக்கிரி, புத்தூர். (24049) (34-15-19-21)

## உதவி பெறுவது தொடர்பான கூட்டம்

சண்டிலிப்பாய்,ஒக்.26

மானிப்பாய் பிரதேசசபை பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களுக்கு யாழ். சமூக செயற்பாட்டு நிறுவனத்தின் உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பான கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மானிப்பாயிலுள்ள பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளைத் தவறாது இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு பிரதேச சபையின் செயலாளர் இப்பிரிவு சனசமூக நிலையங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார். (எ-135)


RLL
தொலைபேசி
விற்பனைக்குண்டு
ஸ்ரீ கண்ணகி
தொலைத் தொடர்பு நிலையம்,
புத்தூர் சந்தி,
மீசாலை.
(24059) (34-15-19)

கணனி வகுப்புகள்/
உடனடி திருத்த வேலைகள்
MS Office XP, Photoshop, Hard Ware, Internet & E-mails, Typesetting, Designing, Scanning
கணனியில் பழுது ஏற்பட்டு விட்டதா? உடன் அழையுங்கள். வீட்டுக்கோ அல்லது நிறுவனத்துக்கோ வந்து திருத்திக்கொடுக்கப்படும்.
100% பயிற்சி வகுப்புகள்.
இல.18, கயிலாசபிள்ளையார் பின் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
0777-666795.
(24053) (34-15-19-21)

மேர்வின்ஸ்
கொம்பியூட்டர் உதவியுடன் தயாரிக்கப்படும் பொலிமர் றபர் ஸ்ராம்புகள், பிளாஸ்ரிக் வீட்டுப் பெயர்ப் பலகைகள், பிளாஸ்ரிக் என்கிறேவிங் ஆகியவற்றை குறித்த தவணையில் தரத்துடன் செய்து பெற்றிட நாடுங்கள்:
91/1. மின்சார நிலைய வீதி.
யாழ்ப்பாணம்.
(23667) (25-15-19)

SHAMROCK
J/ஈச்சமோட்டை வீதி
A/L.2005 பொருளியல்
பேரினப் பொருளாதாரம்
ஆரம்பம்: 27th Mon.
5.30 p.m.(பு.நே)
Mr.M.விக்கி
B.A.(Econ.Spl.) Hons
★Com. Mr. பசில் B.B.A.
★Acc. Mr. தவா B.Com.
(Hons) (Acc.Spl.)
(24052) (26)





55,000 U.S.A. VISA
லொத்தர் GREEN CARD
▲ குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரிய சந்தர்ப்பம்.
▲ ஒரு குடும்பம் 2 விண்ணப்பம் அனுப்பலாம்.
▲ கடந்த காலங்களில் எமது சேவை மூலம் பலர் அமெரிக்கா சென்றுள்ளனர்.
▲ Latest விண்ணப்ப விவரங்களை VPP மூலம் பெற தொடர்பு கொள்க.
வெளிநாட்டில் உள்ளோரும் தொடர்பு கொள்ளலாம்.
PENGUIN BOOK SHOP,
5/30, Super Market - Colombo 13,
T.P.074-615977
(C/30970) (34-15-19-21)

அழகுக் கலை பயிற்சி வகுப்புகள்
நீங்கள் அழகுக்கலை நிபுணராக வர ஆசைப்படுகிறீர்களா?
▲ கோல்ட் - Gold Facial
▲ சில்வர் - Silver Facial
▲ பேள் பிளாட்டினம் - Pearl Platenam Facial
▲ கிளப்ரா - Glabra Facial
▲ அன்டி ஏஜிங் - Anti Agening Facial
▲ பிக்மன்டேசன் - Pikmantation Facial
▲ நோமல் - Normal Facial
▲ வைற்றனிங் பேசியல் - Whitening Facial
▲ மணப்பெண் அலங்காரமும் சிகை அலங்காரமும் (Hair Dressing)
▲ சிகை வடிவமைப்பு
▲ சாறி வேலைப்பாடுகள்
இன்னும் பல சுயதொழில் கற்கைநெறிகள் யாவும் "உதயன்" கேட்போர் கூடத்தில் தகுதியும், தகைமையும் வாய்ந்த வடகிழக்கின் பிரபலமான அழகுக்கலை நிபுணர் திருமதி மிதுனா ஆனந்தரமணன் அவர்களால் 13.11.2003 முதல் 26.11.2003 வரை தினசரி காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00மணிவரையும் நடைபெறும். பங்கு பற்றுபவர்களுக்கு தகுதிவாய்ந்த Diploma சான்றிதழ் வழங்கப்படும்.
ஆர்வமுள்ளவர்கள் உதயன் பணிமனையில் பதிவு செய்து கொள்ளலாம்.
02622 24524, 077 616 7729, 222 6597
அழகுக் கலை நிபுணர்
திருமதி மிதுனா ஆனந்தரமணன்,
Dip.in Cosmetology, Bridal Dressing, Hair Dressing, Cum Therapast (India & Srilanka)
(23160) (34-15-19-21)


## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07 - 01 - 1932 | 26 - 10 - 1999 |

### அமரர் சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன் (J.P.U.M.)

(முன்னாள் தலைவர், வலி. வடக்கு பிரதேச சபை, மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம், யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்)

*நீங்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர*
*உங்கள் ஆசியை வேண்டி நிற்கின்றோம்!*

மல்லாகம். (24056) (26) திருமதி பா. ஸ்ரீபாஸ்கரன்.

## மரண அறிவித்தல்

### வடிவேலு பூலோகராஜா

வட்டுக்கோட்டை மேற்கைப் பிறப்பிடமாகவும் வேலணை கிழக்கு, செட்டிப்புலத்தை முன்னர் வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 18/8, கொண்டலடி வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்டவருமான வடிவேலு பூலோகராஜா 22.10.2003 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி வடிவேலு-செல்லமுத்து தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற திரு.திருமதி முருகேசு-அமிர்தம்மா தம்பதிகளின் மருமகனும் சிவபாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் தர்மகுணராஜா (இ.மி.ச.,திருகோணமலை), சுகுணராஜா(கொழும்பு), சாந்தராணி (பிரான்ஸ்), சடாச்செல்வி (யாழ்ப்பாணம்), ஜெயராசா (மாநகர சபை, யாழ்ப்பாணம்), புஸ்பராசா (நீர்கொழும்பு) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் மாலினிதேவி (திருகோணமலை), கணேஸ்வரி (இந்தியா), தவராசா (பிரான்ஸ்), கணேசதாசன் (தேனுகா தேநீரகம், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்), பத்மாவதி (மாநகரசபை, யாழ்ப்பாணம்), சுதாயினி (நீர்கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் பவீந்தர், சுஜீவன் (திருகோணமலை), கஜீவன், கௌசிகன், கௌஷல் (இந்தியா), நிதர்ஷன், துவாரகா, தாஸ்மா, ஜெனஜா, சிந்துஜா (பிரான்ஸ்), தேனுகா, கஜமுகன் (யாழ்ப்பாணம்), கம்ஷாயினி, கபினுஜா (நீர்கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.10.2003) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் காலை 9 மணியளவில் நடைபெற்று, பூதவுடல 10 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*18/8, கொண்டலடி வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (34) (24047)

தகவல்:
சுகுணன்
(மகன்).


கம்ப்யூட்டர் உலகம்
22-1/3, Galle Road, Dehiwala.

இலங்கையின் முழுமையான தமிழ் கணனி மாத சஞ்சிகை
வரும் இதழிலிருந்து புதிய தொடர்கள் ஆரம்பம்
★ கணனி அறிமுகம்(புதியவர்களுக்கானது) ★ MS Office ★Computer Programming ★ HTML (எச்ரீஎம்எல்)
★ Virus(வைரஸ்) ★ இணையம்(Internet) ★ Page Maker(பேச் மேக்கர்) ★ Flash ★ASP(ஏஎஸ்பி) ★ Database
வரும் இதழின் சிறப்புக் கட்டுரை : OCR
இன்னும் ஏராளமான கட்டுரைகள், துனுக்குகள், போட்டிகள், கேள்வி பதில்கள்.
இன்றே சந்தாதாரராகுங்கள் : தனி இதழ் ரூபா 30/= வருட சந்தா ரூபா 300/= மட்டும்.

கம்ப்யூட்டர் உலகம் மாத சஞ்சிகையின் வெளியீடுகள்
❑ முழுமையான கணனி வழிகாட்டி
COMPLETE COMPUTER GUIDE ரூபா 250/=
சிறு வழிகாட்டி நூல்கள்

| | | | |
|---|---|---|---|
| ❑ MS WORD | ரூ.40/= | ❑ MS EXCEL | ரூ.40/= |
| ❑ MS ACCESS | ரூ.50/= | ❑ POWERPOINT | ரூ.40/= |
| ❑ கணனி அறிமுகம் | ரூ.40/= | ❑ இன்டர் நெட் | ரூ.40/= |
| ❑ HIML | ரூ.40/= | ❑ HARDWARE | ரூ.50/= |
| ❑ JAVA SCRIPT | ரூ.50/= | ❑ VB SCRIPT | ரூ.50/= |
| ❑ ASP | ரூ.80/= | ❑ FLASH | ரூ.50/= |

200இற்குமேல் பெறவிரும்பும் கணனி கல்வி நிறுவனங்களுக்கு அந்தந்த நிறுவனங்களின் பெயரில் சலுகைவிலையில் செய்துதரப்படும்.
(C/30994)

சந்தா மற்றும் வேண்டுகைப் படிவம்
❑ 12 மாத கம்ப்யூட்டர் உலகம் சஞ்சிகை ரூ. 300/=
❑ முழுமையான கணனி வழிகாட்டி ரூ. 250/=

| | | | |
|---|---|---|---|
| ❑ MS WORD | ரூ.40/= | ❑ MS EXCEL | ரூ.40/= |
| ❑ MS ACCESS | ரூ.50/= | ❑ POWERPOINT | ரூ.40/= |
| ❑ கணனி அறிமுகம் | ரூ.40/= | ❑ இன்டர் நெட் | ரூ.40/= |
| ❑ HIML | ரூ.40/= | ❑ HARDWARE | ரூ.50/= |
| ❑ JAVA SCRIPT | ரூ.50/= | ❑ FLASH | ரூ.50/= |
| ❑ VB SCRIPT | ரூ.50/= | ❑ ASB | ரூ.80/= |

பெயர் : ........................................
முகவரி : ........................................
காசுக்கட்டளையை "COMPUTER ULAGAM" என்ற பெயருக்கு 'DEHIWALA' தபாலகத்தில் மாற்றத்தக்கதாய் எடுத்து அனுப்பவேண்டிய முகவரி:
COMPUTER ULAGAM,
22-1/3, Galle Road, Dehiwala.
(25-21-15-19)

உதயன்

## சிதையும் குடும்ப உறவுகள்

குடாநாட்டு நீதிமன்றங்களில் விவாகரத்து மற்றும் தாபரிப்பு வழக்குகள் வெகுவேகமாக அதிகரித்து வருகின்றன என்று கவலை தெரிவித்திருக்கிறார் யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன்.

குடும்ப உறவுகள் - முக்கியமாக கணவன் - மனைவி உறவுகள் - முறிந்து குடும்பங்கள் சீரழியும் போக்கு தலைதூக்கியிருப்பதாகவும் அவர் எச்சரிக்கை செய்திருக்கின்றார்.

கணவனால் கைவிடப்படும் பெண்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகின்றது. அவ்வாறு கைவிடப்பட்ட பெண்கள் கணவன்மாரிடம் இருந்து தாபரிப்புப் பணம் பெறுவதற்காக நீதிமன்றங்களை நாடி வந்து அபலைகளாக அலைகின்றனர் என்றும் தெரிவித்திருக்கும் மேலதிக நீதிவான், நாளொன்றுக்கு சராசரி இருபதுக்கும் மேற்பட்ட தாபரிப்பு வழக்குகள் விசாரணைக்காக எடுக்கப்படுகின்றன என்ற திடுக்கிடும் தகவலையும் வெளியிட்டிருக்கின்றார்.

இந்த ஆபத்தான சமூகப் போக்கினை மாற்றி குடும்ப உறவுகள் சீர்குலையாமல் தடுக்க வேண்டிய ஆலோசனைகளை வழங்குவது பொது அமைப்புகளினதும் கலாசாரம் பேணுகின்ற குழுக்கள் போன்றனவற்றினதும் தலையாய கடமை என்றும் நீதிவான் நந்தசேகரன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அடிதடி, சண்டை, ஆள்கடத்தல், கொலை கொள்ளை, பாலியல் வல்லுறவு, கோஷ்டி மோதல்கள் என்று சமூகச் சீரழிவுச் செயல்கள் அதிகரித்து வருவதாகக் கூச்சல் போடுகின்றவர்கள் குடும்பங்கள் சீரழிவதும் ஒரு சமூகச்சீரழிவு தான் என்பதை மறந்து விடுகின்றனர்.

ஒரு குடும்பம் சீரழியும் போது அது அந்த சமூகத்தை நோயாளி ஆக்கி முழுநாட்டையுமே பாதிக்கக் கூடியது. அமைதி என்றாலும் ஆக்கம் என்றாலும் அது முதலில் மனங்களில் இருந்துதான் தோற்றுவிக்கப்படமுடியும். குடும்ப உறவுகளிடையே இறுக்கமான பிணைப்பு, நெருக்கம், புரிதல் இருந்தால்தான் அது நல்லதொரு குடும்பமாக மலரமுடியும். அங்கிருந்துதான் அன்பும், அமைதியும், அபிவிருத்தியும் ஊற்றுவிடமுடியும். இன்று குடும்பம் என்பது பிரச்சினைகளின் மையமாக மாறி வருகின்றது.


கணவன் - மனைவி இடையிலான தகராறுகள், அதன் விளைவாக குழந்தைகள் எதிர்நோக்குகின்ற பாதிப்புக்கள் என்பவற்றை தாராளமாக எந்தக் குடும்பத்திலும் காணமுடிகின்றது. உணர்ச்சிகளின் விளைவாய் அமைகின்ற இளவயது திருமணங்கள், சரியான புரிதல் இன்றி பொருளாதார நோக்குடனான திருமண பந்தத்தில் இணைகின்ற நிலைமை, வாழ்க்கை பற்றிய சரியான எதிர்பார்ப்பு இன்மை, போரின் விளைவுகள் தந்த நெருக்குவாரங்கள், நீண்டகாலப் பிரிவுகள், தொழிலின்மை, வறுமை, பொருளாதார அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் இவை போன்ற ஏராளமான காரணங்கள் கணவன் - மனைவி உறவுகளைச் சீர்குலைப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. திருமணம் முடித்த ஆண் ஒருவர் மனைவியை திடீரென உதறித் தள்ளிவிட்டு சுலபமாக மறுமணம் செய்துகொள்ள முடிகின்றது. ஆனால், கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் நிலையோ மிகவும் பரிதாபகரமாக மாறிவிடுகின்றது.

இத்தகைய பெண்கள் சமூகத்தில் எவ்வாறு நடத்தப்படுகின்றனர், அவர்களைச் சார்ந்த பிள்ளைகள் மற்றும் சார்ந்திருப்போரின் நிலைமை பின் என்னவாகின்றது என்பன எல்லாம் அதன் பிறகு முக்கியத்துவம் பெறுவதில்லை.

போர் ஓய்ந்து சமாதான சூழல் ஏற்பட்டிருக்கின்ற இக்காலப் பகுதியில் அபிவிருத்தி, புனர்வாழ்வு பற்றி அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. இடிந்துபோன கட்டடங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. வர்ணம் பூசி அழகுபடுத்தப்படுகின்றன. தற்போது உருவாகிவரும் குடும்ப உறவுகளின் சிதைவுகளுக்குப் பின்னாலும் அதே போரின் தாக்கங்கள் இருக்கின்றன. எனவே, போர் நடவடிக்கைகளால் இடிந்தழிந்த கட்டடங்களைப் போன்றே இந்தக் குடும்பச் சீரழிவுகளையும் நோக்க வேண்டும். புனர்வாழ்வு, புனரமைப்பு இதற்கும் வேண்டும்.

குடும்ப உறவுகளின் சிதைவுக்குக் காரணமாகின்ற மன முறிவுகளை ஆற்றுப்படுத்துவது அவசியமானதும் அவசரமானதும். எனவே, குடும்பப் புனர்வாழ்வு சேவைகள் முடுக்கிவிடப்பட வேண்டும். அதற்கு வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். குடும்பத்தை சிதையவிட்டு விட்டு தேசத்தைக் கட்டியெழுப்ப முடியாது.

## காலத்தின் பதிவு



வளரும் பயிரை.... படம் : பிறேம்

# வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு பாடசாலை மட்டத்தில் கருத்துரை

## மக்கள் நலன்புரிச்சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ்.குடாநாட்டில் வீதி விபத்துக்களைத் தடுக்கும் நோக்குடன் பாடசாலை மாணவர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான கருத்துரைகள் வழங்கும் நடவடிக்கையில் மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் என்ற அமைப்பு ஈடுபடவிருக்கின்றது. அந்த அமைப்பின் மேலதிக ஆணையாளர் பி.சஞ்ஜித்குமார் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

நேற்றுக்காலை சங்கப் பணிமனையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடாநாட்டில் விபத்துக்களைத் தடுப்பதற்காக மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கையில் எமது சங்கம் ஈடுபட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக யாழ்.நகரப் பாடசாலைகளில் மாணவர் மத்தியில் வீதி ஒழுங்குகள் தொடர்பான கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது. இதற்கு யாழ். பொலீஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவுப் பொலீஸாரின் உதவிகள் கிடைத்துள்ளன.

இரண்டாம் கட்டமாக பொதுமக்கள் மத்தியிலும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளோம் - என்றார்.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் அமைப்பின் தலைவர் இ.சற்குணநாதன். உதவி ஆணையாளர் சதீஷ், ஆலோசகர் கோபால மூர்த்தி ஆகியோரும் கலந்துகொண்டனர். (3-8)

# சட்டம் ஒழுங்கை பேணுவது குறித்து யாழ். செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ்.மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள்குடியமர்வு மற்றும் சட்டம் ஒழுங்கைப் பேணுதல் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 30ஆம் திகதி யாழ்.செயலகத்தில் இடமபெறவுள்ளது.

குடாநாட்டில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து வருவதால் அண்மைக் காலமாக பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதனை எவ்வாறு சீராக்குவது என்பது பற்றி ஆராய்வதற்காகவே இக்கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், சமூக அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பான பிரச்சினைகள், மோட்டார் போக்குவரத்துச் செயற்பாடுகளை பன்முகப்படுத்தல், ஓய்வூதிய வேலைகளை பன்முகப்படுதல், மதுபான உத்தரவுப் பத்திரம் வழங்கல் - யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, குடிதண்ணீர் வழங்கல், தேசிய அடையாள அட்டை வழங்கலை விரிவுபடுத்தல், கடவுச்சீட்டு வழங்குவதற்கான நடவடிக்கை எடுத்தல், மணல் அகழ்தலும், தோண்டு செல்லும் போது ஏற்படும் பிரச்சினைகளும், அரச சார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா. நிறுவனங்கள் என்பவற்றின் புனர்வாழ்வு தொடர்பான பிரச்சினைகள் மற்றும் மாவட்ட விவசாயக்குழு தொடர்பான பிரச்சினைகள் இங்கு ஆராயப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்கள் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.

# உடுவில் விவசாய நிலங்களில் மண்ணை ஆய்வுசெய்ய கோரிக்கை

வலிகாமம் தெற்கு,ஒக்.26

உடுவில் கமநலசேவை நிலையத்துக்குட்பட்ட பல இடங்களில் செய்கை பண்ணப்பட்டுவரும் சகல பயிர்களும் பல நோய்த்தாக்கத்துக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன. நீண்டகாலமாக இப்பிரதேசத்து நிலமண் பரிசோதனை செய்யப்படவில்லை. நோய்த்தாக்கத்துக்கு காரணங்களை கண்டறியவும், நோய்கள் வராமல்தடுக்கவும் உரிய பாதுகாப்பை மேற்கொள்ளுவதற்காக இப்பகுதியில் மண் பரிசோதனை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உடுவில் கமநல சேவை நிலையத்துக்கு வருகை தந்திருந்த விவசாய அதிகாரிகள் குழுவிடம் விவசாயிகள் சார்பாக விவசாய சம்மேளனங்களின் தலைவர் செ.இலகுநாதன் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

விவசாய கால்நடை அமைச்சு செயலாளர் தனுசேனா ஹெட்டி ஆராய்ச்சி, கமநல சேவைத் திணைக்கள ஆணையாளர் லோக்கல் இந்துருகல்ல, ஹொப் பக்கொடுவ விவசாய ஆராய்ச்சி நிறுவனப் பணிப்பாளர் எஸ். சொய்சா அடங்கிய விவசாயக் குழுவினர் கடந்த ஞாயிற்றுக் கிழமை உடுவில் கமநல சேவை நிலையத்தை பார்வையிட வந்த போதே அவர்களிடம் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

உடுவில் கமநல சேவைநிலையப் பெரும்பாக உத்தியோகத்தர் செ.சோதிநாதன், விவசாய சம்மேளனத் தலைவர் செ.இலகுநாதன். விவசாய சம்மேளன உறுப்பினர்கள், விவசாயிகள் பலரும் விவசாய அதிகாரிகள் குழுவினரை வரவேற்று கலந்துரையாடினர்.

விவசாயிகள் தமது தேவைகள் குறைபாடுகளை அவர்களிடம் கோரிக்கையாக விடுத்தனர். இயற்கையாக காலத்துக்குக் காலம் ஏற்படும் அழிவுகள் மற்றும் அடிக்கடி மாற்றமடையும் கால நிலைகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு - அழிவுகளுக்கு - நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென அவர்கள் கேட்டுக்கொண்டனர். அக்குழுவிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு:-

☆ எமது பிரதேச விவசாயிகளுக்குச் சொந்தமான பயிர் நிலங்கள் உயர் பாதுகாப்பு வலயத்தில் காணப்படுவதால் அங்கு சென்று விவசாயம் செய்ய முடியாமல் உள்ளது. நாம் எமது மண்ணில் சென்று விவசாயம் செய்ய அனுமதி பெற்றுத்தர வேண்டும்.

☆ இதுவரை காலமும் விவசாய நிலங்களில் இருந்து மீட்கப்படாத கண்ணிவெடிகளையும் மிதிவெடிகளையும் அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

☆ விவசாயிகளுக்குத் தேவையான பயிற்சிகள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயிகள் சம்பந்தப்பட்ட சகல பிரச்சினைகளையும் நேரில பார்த்து உணர்ந்துள்ளோம் பிரச்சினைகளுக்குரிய தீர்வை எடுக்க விரைந்து செயற்படுவோம் என அதிகாரிகள் குழுவினர் தெரிவித்தனர். (3-152)

### நாளை

ஐப்பசி 10
திங்கட்கிழமை
(27.10.2003)
திதி : துதியை
பிற்பகல் 2.46 வரை.
நட்சத்திரம் : விசாகம்
பிற்பகல் 2.46 வரை
சுபநேரம்: 12.3-1.33
ராகுகாலம்: 7.33-9.33
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

அன்புக்குரியவர்களின் ஆறுதல் வார்த்தைகளும் கண்ணீரை வரவழைக்கும்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தற்போது பாவனையில் உள்ள Good will ரக்ரர் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ.திருச்செல்வம், சேச் ஒப்பசிட் லேன், உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (24055)

## கணனிகள் விற்பனைக்கு

Dell PIII கணனிகள் மலிவு விலையில் விற்பனைக்கு உள்ளன. மாலை 5.00 மணிக்குப் பின்னர் பார்வையிடலாம். தொடர்பு: T.P. 2225361, 66/3, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (24039)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.(Electronic நிறுவை). (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (23775)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் 27-10-2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். அத்துடன் ஒருகிழமை குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (24060)

## தவறிவிட்டது

திருலோகசுந்தரம் அருந்தவநாயகி என்பவரின் தேசிய அடையாள அட்டை (548172209V), விசேட அடையாள அட்டை என்பன 23.10.2003 அன்று யாழ். போதனா வைத்தியசாலைக்கும், கே.கே.எஸ். வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தம்பளை, கந்தரோடை, சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும்.(24048)

## திருமண சேவை

எம்மிடம் வெளிநாட்டு ஸ்பொன்சா மணமக்களின் குறிப்புகளும், உள்நாட்டு ஆசிரியர், எழுதுவினைஞர், வர்த்தகர்கள், டாக்டர்கள், எஞ்சினியர்கள், எக்கவுண்டர்கள் மணமக்களின் குறிப்புக்களும் கத்தோலிக்கரினது தகவல்களும் எம்மிடம் உண்டு. தொடர்பு: கல்யாணமாலை, திருமணசேவை, 235/7, பருத்தித்துறை வீதி, ஆனைபந்தி, யாழ்ப்பாணம். கொழும்பில் கல்யாணமாலை. T.P. 338162, Fax 338161. (24021)

1964, பூராடம், பாவம் 38, U.K. மணமகனுக்கு அங்கு அல்லது கனடா ஐரோப்பிய நாடுகளில் ஸ்பொன்சர் செய்யக்கூடிய மணமகள் தேவை. தொடர்பு இலகு திருமண சேவை. துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி. (24057)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, செவ்வாய் குற்றமில்லாத வயது 33, M.B.B.S. டாக்டருக்கு தகுதிவாய்ந்த அழகான மணமகள் தேவை. ஜாதக விபரங்களுடன். விளம்பர இல. 2081, மேற்பா உதயனுக்கு விண்ணப்பிக்கவும். (24008)

## தேவை

சாறி பிளவுஸ் தைப்பதில் அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கலாம்.

தொடர்பு:
25, ஸ்ரேசன் வீதி,
கொக்குவில்.
(24054)

## பெற்றுக் கொள்ளவும்

கொழும்பு - 6, 40/8, தர்மராம வீதியிலுள்ள கிங்ஸ்ரன் சர்வதேசிய கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியை செல்வி ஆர். ஹரிஜினி அவர்களது ஆவணங்களும் சிறுதொகைப் பணமும் அடங்கிய கைப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஆகவே அவர் கீழுள்ள முகவரியில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

தி. இராசலிங்கம்,
C/o தி.ரவீந்திரன்,
சினிரோன் கொமினிகேஷன்,
70,சட்டநாதர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(24032)(26) T.P. 3873

## காணி விற்பனைக்கு

வவுனியா, வைரவ புளியங்குளத்தில், ஸ்ரேசன் வீதியில் பாதையுடன் இணைந்த 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777-585922. (C/30991)


சாவகச்சேரி, சங்கத்தானையில் தாமோதரம் வீதிக்கு, சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகில், பொற்கொல்லர் வீதியில் 11பரப்பு 10குளி காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ரதி கனகசபை, C/o சுரா தாமோதரம், தமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை. (23988)

## வீடு விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதி, உப்புமடப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில், ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கில் சகல வசதிகளுடனும் வீடு. 5 பரப்புக காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 071 2347564. (24046)

# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

## 4ஆம் வருடம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 - 10 - 1920 | 22 - 01 - 1999 |

அமரர்
**சின்னப்பா பொன்னுத்துரை**

ஆண்டுகள் நான்கு மறைந்தாலும்
ஆறுமோ எம் இதயம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கிறோம்.

மனைவி மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
பலாலி வீதி, உரும்பிராய். (24038)(35-21-15-19)

## 3 ஆம் வருடம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 - 06 - 1958 | 28 - 10 - 2000 |

திருமதி
**ஜெயமலர் தர்மபாலன்** (தங்கம்)

மூன்றாண்டு ஆயிற்றோ
தங்கம் ஒளி விளக்கு அணைந்து?
தீராத வேதனையில் தினம் தினம்
உமைநினைந்து மாறாத நினைவுடனே
மாநிலத்தில் வாழ்கின்றோம்.

அம்மா மற்றும்
உறவினர்கள்.

# நெஞ்சகலா மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



உயர்திரு. சட்டத்தரணி
**ஸ்ரீஸ்கந்தராசா தரணீதரன்**
தோற்றம் 26.10.1965 மறைவு 27.10.2000



திருமதி
**கனகசபை ஈஸ்வரதேவி**
தோற்றம் 21.03.1948 மறைவு 27.10.2000



செல்வன்
**கனகசபை உதயகுமார்**
தோற்றம் 08.11.1967 மறைவு 29.10.2000



செல்வன்
**கனகசபை செந்தூரன்**
தோற்றம் 27.11.1984 மறைவு 30.10.2000

திதி: 26-10-2003

விபத்தில் உயிர்நீத்த எங்கள் பாசமலர்களே!
ஆண்டுகள் மூன்று உருண்டோடி விட்டன! ஆறவில்லை நம்துயரம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களில் நீங்காது நிறைந்து நிற்கும்.

தகவல்:
ச.ஸ்ரீஸ்கந்தராசா *ஜே.பி.*
*திருமால் அச்சகம்,*
*393, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.*
T.P.021-2225200

உங்கள் ஆத்மசாந்திக்காய்
இறைவனை வேண்டி நிற்கும்:
- குடும்பத்தினர்.

(23919) (26-15-19)


பொதுவான களைகள், வேர்த்தண்டுக்
கிழங்குள்ள களைகளை
சிறப்பாக கட்டுப்படுத்த

FINCHEM AGRO DIVISION



டிஸ்ட்ரோய்

பிரீன்கெம்

பீ.ஏ.எஸ்.எவ்.பிரீன்லே(பிரைவெட்) லிமிட்டெட்,
186, வொக்ஸ்சோல் வீதி,
கொழும்பு- 02

மேட்டு சேற்று நில
விவசாயத்தை – காப்பாற்றும்

பீடைநாசினிகள் ஆபத்தானவை அவதானமாகக் கையாளுங்கள்

# கியுபிட் போர்ட் KUPID FORT Capsules

(இது ஒரு இந்தியன் தயாரிப்பு)



பிரசித்தி பெற்ற, ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை, சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஒளஷதம். கியுபிட் போட் கீழ்க்காணும் பிரச்சினைகளை சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத் தன்மையைப் போக்க
- வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு
- சாதாரண பாலியல் குறைபாடுகளை சரிப்படுத்த

100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப்பட்டது.
எதுவித பக்க விளைவுகளும் கிடையாது.
கியுபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.
கியுபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

**நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்**

**விசாரணைகள்** **யாழ்.நகரில்**
தொலைபேசி 222- 3191



நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

*கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்டது.*

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(குறிப்பு:சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-30457)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
23
-
03
-
1929



மறைவு
26
-
09
-
2003

### அமரர் அப்பாத்துரை நாகரத்தினம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

எமது அன்புத் தந்தையார் சிவபதமடைந்த செய்திகேட்டு, நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி மூலமும், தந்திமூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிக்கிரியையில் பங்குபற்றியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (26.10.2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாவலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

\- குடும்பத்தினர்.
(35-15-19)

(23922)


# Diploma in Montessori and Pre School Education

## சிறார்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

**பாட விதானம்**

- பாலர் பாடசாலை கற்பித்தல் முறைகளும் நுணுக்கங்களும்
- சிறுவர் உளவியல்
- ஆரம்பநிலைப்பள்ளி உபகரணங்களும் அதன் பாவனைகளும்
- மொழியும் அதன் பிரயோகமும்

பாடநெறி காலம்:3 மாதம்

யாருக்காக :

- ☆ பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கும் பயிற்சி ஆசிரியர்களுக்கும்
- ☆ பாலர் பாடசாலையில் கற்பிக்க விரும்பும் பெண்களுக்கு
- ☆ O/L , A/L முடித்த பெண்களுக்கு
- ☆ தாய்மார்களுக்கு

Course Fee 8 3500/= மட்டுமே

- வகுப்புக்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் 8.00a.m - 1.00p.m
- British Business School ன் Smart Kids பாலர் பாடசாலைகளில் இலவசப் பயிற்சி அளிக்கப்படும்

## சிறார்களுக்கு பிரத்தியேக கணணி வகுப்புகள்

6 முதல் 15 வயது வரையிலான சிறுவர்களுக்கு British Business School கணணி வகுப்புகளை நடாத்துகின்றது.

**விசேட அம்சங்கள்**

- தமிழிலும் ஆங்கிலத்திலும் கற்பிக்கப்படும்
- தனிப்பட்ட கவனம்

விசேட சலுகை
Ms Office
3 மாத கால
பாடநெறி 1500/=
மட்டுமே




British BUSINESS SCHOOL
Where Students Come First

# BRITISH BUSINESS SCHOOL

| JAFFNA CITY CAMPUS | JAFFNA KACHCHERICAMPUS | VADAMARADCHY CAMPUS |
| --- | --- | --- |
| #140, TEMPLE ROAD, JAFFNA. | 174, KANDY ROAD, JAFFNA. | POINTPEDRO ROAD, KIRAMAKKOTTADI, PULOLY. |

HOT LINE : 021-222-5796





# அன்றே காசு

வெளிநாட்டில் இருந்து பணம் அனுப்புவதற்கு
மிகவும் இலகுவான, குறைந்த செலவிலான,
அதிக பாதுகாப்பான முறை
டோ டு டோ எக்ஸ்பிரஸ்.
இதனால் வெளிநாட்டில் வேலைபார்க்கும்
பெரும்பான்மையோர் டோ டு டோ எக்ஸ்பிரஸ்
மூலம் பணம் அனுப்புகிறார்கள்.
இப்போது டோ டு டோ எக்ஸ்பிரஸ்
முன்னரை விட முன்னேறி,
அதி வேகத்துடன் செயற்படுகிறது.
வெளிநாட்டில் இருந்து அனுப்பும்
பணம் இப்போது மிகவும்
இரகசியமாக அன்றே கைவந்து
கிடைத்து விடுகிறது.

Door to Door EXPRESS
வெளிநாட்டிலிருந்து அனுப்பும் பணம் அன்றே பாதுகாப்பாக கிடைக்கும்

BANK OF CEYLON
இலங்கை வங்கி
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி

மேலதிக தகவல்களுக்கு அருகிலுள்ள இலங்கை வங்கியில் அல்லது
தலைமை அலுவலகத்தில் திலக் அழகியவன்ன 2445792 அல்லது
உபாலி ரணசிங்க 2471666 அல்லது லக்சிறி விஜேரத்தின 2541933
உடன் தொடர்பு கொள்ளவும்.

PHOENIX O&M 2110

## போதிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டால்

# தமிழ் மாணவர்கள் வெளிநாட்டில் புரியும் சாதனைகளை இங்கும் நிகழச் செய்யலாம்

## நூல் வெளியீட்டுவிழாவில் மாவை எம்.பி. உரை

யாழ்ப்பாணம்,ஒக்.26

மாணவர்களுக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படுமானால் தமிழ் மாணவர்கள் வெளிநாடுகளில் புரியும சாதனைகளை எமது நாட்டில் நிகழ்த்தச் செய்யலாம்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா.

கடந்த திங்களன்று யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத்தின் 'வித்தகம்' நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

எமது நாட்டில் பலசாதனைகளைப் புரியக்கூடிய தமிழ்மாணவர்கள் வசிக்கின்ற போதிலும் அவர்களது சாதனைகள் வெளிநாடுகளிலேயே படைக்கப்படுகின்றன.

இதற்குப் பிரதான காரணமாக அமைவது தமிழ்மாணவரின் கல்வி வசதிகள் வடக்கு - கிழக்கில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளமைதான்.

இதனை மாற்றி அமைப்பதற்கான பூரணமான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு விரைவாக மேற்கொள்ள வேண்டும். மூளைசாலிகள் வெளியேற்றம் எனப் பேசுகின்றோம்: உரிய வசதிகள் இருந்தால் ஏன் கற்றவர்களை நாம் இழக்க நேரிடுகின்றது?

வசதிகள் இருந்தால் அவர்கள் ஏன் வெளிநாடுகளுக்குச் செல்லப் போகின்றார்கள்?

வடக்கு - கிழக்கில் உயர்கல்வி நிறுவனங்களாகத் தொழிற்படும் தொழில்நுட்பக் கல்லூரிகள் எவ்விதத்திலும் கவனிக்கப்படாத நிலையில் செயற்படுகின்றன. இதுபற்றி நாடாளுமன்றிலும், மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சின் கூட்டங்களிலும் பல தடவை பேசியுள்ளேன்.

வாக்குறுதிகள் மட்டும் அளிக்கப்பட்டுள்ளன. அவற்றை நம்பக்கூடாது. நாம் சிலநடவடிக்கைகளைச் செய்தே ஆகவேண்டும்.

யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவனத்திற்கு இடம் இல்லை என்ற பிரச்சினை மாணவர்களின் முயற்சியால் நீக்கப்பட்டுள்ளது. இனி அந்தக் காணியில் கட்டடங்களைக் கட்ட வேண்டிய தேவையே உள்ளது.

இதற்கு நிதி உதவி பெறப்பட்டு விரைவில் புதிய இடத்தில் இந்த உயர்தொழில்நுட்ப நிறுவனம் இயங்க என்னால் ஆனமுயற்சி எடுப்பேன்.

அதிக தொழில்நுட்ப வளர்ச்சி கொண்ட நாடுகள் கூட பல்கலைக்கழகங்களுக்கு அடுத்த படியாக தொழில்நுட்பக் கல்லூரிகள் பலவற்றை நிறுவி அதனூடாக தொழில்நுட்ப அறிவையும் புதிய சிந்தனைகளையும் வேலை வாய்ப்புக்களையும் உருவாக்கிக் கொடுக்கின்றன.


உடைநெய்தல், சிகை அலங்காரம் முதலான கற்கை நெறிகள் கூட அங்கு கற்பிக்கப்படுகின்றன. ஆனால், எமது நாட்டில் 20 ஆண்டுகளுக்கு முன்அறிமுகப்படுத்தப்பட்ட பாடங்கள் கூட தொழில் நுட்பக் கல்லூரிகளில் ஒழுங்காக இடம்பெறுவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.

மிகவிரைவில் எமது தமிழ் மாணவர்கள் சர்வதேச தரம்மிக்க சான்றிதழ்களைப் பெறக்கூடிய தகுதியான பாடநெறிகள் உருவாக துறை சார்ந்தோர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைந்த வகையில் எமது பகுதித் தொழில்நுட்பக் கல்லூரிகளும் செயற்படுவதன் மூலம் மேலும் எமது மாணவர்களினதும், தொழில்நுட்பக் கல்லூரிகளினதும் தரத்தை உயர்த்த முடியும்.

உயர்பாதுகாப்பு வலயம் என்று கூறிக் கொண்டு கல்விக்குத் தடையாக பல இடங்களிலும் இராணுவம் அரண் அமைத்தும், முகாம் அமைத்தும் நிற்கின்றது.

தற்போது அந்த உயர்பாதுகாப்பு வலய எல்லைகளை இராணுவத்தினர் மேலும் விரிவுபடுத்தி வருகின்றனர். இதனைத் தடுக்க மக்கள் போராட்டங்கள் இடம்பெற வேண்டிய சூழ்நிலை உருவாகி வருகின்றது என்றார்.



அங்கு உரை நிகழ்த்திய தமிழீழ விடுதலை அணியின் பொதுச் செயலாளர் மா.க. ஈழவேந்தன் தமது உரையில்:-

எமது மண்ணிலேயே கல்வியும் போராட்டமும் இணைந்து வளர்ந்துள்ளது.

எமது மக்களின் அறிவும், வீரமும் வளர வழிவகுக்க வேண்டும் என்பதே தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் விருப்பம்.

கல்வியால் உலகமெங்கும் தமிழன் தலைநிமிர்த்தி நிற்கின்றான். இந்த நிலை தொடர இத்தகைய கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி அவசியம் - என்றார். (எ-12)

## சண்டிலிப்பாயில் புதிதாக 125 பேருக்கு கொடுப்பனவு

சண்டிலிப்பாய்,ஒக்.26

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப பணம் புதிதாகப் பெறுவதற்கு விண்ணப்பித்த 125 பேருக்கான கொடுப்பனவு எதிர்வரும் நவம்பர் மாதம் முதல வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவை வழங்குவதற்கு சமூகநலன்புரி அமைச்சு ஒரு லட்சத்து 39 ஆயிரம் ரூபாவை அண்மையில் ஒதுக்கீடு செய்துள்ளதுஎன்றும் -

இவர்கள் விண்ணப்பம் செய்த மாதத்திலிருந்து நிலுவையுடன் அடுத்த மாதம் இக்கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-135)

## உரும்பிராய் இந்துவில் மூன்று விழாக்கள்

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் 'வித்தியா சஞ்சிகை வெளியீடும், ஒலி ஒளி கலையகத் திறப்பு விழாவும் நூலக வார விழாவும் நாளை பி.ப. 2.30 மணிக்கு கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரி முதல்வர் ஆனஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-4)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

வலி.கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நாளை திங்கட்கிழமை கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்படவுள்ளன.

எனவே, வளர்ப்பு நாய்களை அன்றையதினம் கட்டி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-10)

# காரைநகர் வேம்படியில் ஐவர் தாக்கப்பட்டனர்

காரைநர்,ஒக்.26

மதுபோதையில் வந்த இளைஞர் குழுவினால் வர்த்தகர் உட்பட ஐந்து பேர் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வியாழன் இரவு 9.00 மணியளவில் காரைநகர் வேம்படி பகுதியில் இடம்பெற்றது.

சம்பவதினம் இரவு வேம்படி சந்தியில் உள்ள தனது வர்த்தக நிலையத்தைப் பூட்டிவிட்டுத் தனது இரு பிள்ளைகளுடன் வீடு திரும்பிய வரை வழிமறித்த இந்த இளைஞர் குழுவினர் அவர்களைக் கண்டபடி தாக்கியதுடன் அதனை தடுக்க முற்பட்ட வேறு இருவரையும் தாக்கி காயப்படுத்தி உள்ளனர்.

காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த எஸ். சோமசுந்தரம் (வயது 58) அவரது மகன்மாரான சோ. திருநீலகண்டசிவம் (வயது 26), சோ.சந்தியசிவம் (வயது 24) மற்றும் தி.ஞானேந்திரன (வயது 48), ந.குகராஜன் (வயது 19) ஆகிய ஐவருமே காயமடைந்து காரைநகர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (ஜ-73)

## நெல்விதைப்பு ஆரம்பம்

வடமராட்சி,ஒக்.26

வடமராட்சி கிழக்கு அம்பன் குடத்தனைப் பகுதிகளில் காலபோக நெற்செய்கை நடவடிக்கைகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதிகளில் உள்ள வயல் நிலங்கள் பண்படுத்தப்பட்டு , விதைப்பு நடவடிக்கைகள் சுறுசுறுப்பாக தற்போது நடைபெற்று வருகின்றன. (எ-173)

# கட்சி பேதங்களை கருத்தில் கொண்டு நெருக்கடிக்கு தீர்வுகாண முனையாதீர்!

## அஞ்சல் ஊழியர் சங்கக் கூட்டத்தில் கோரிக்கை

அச்சுவேலி,ஒக்.26

கட்சி அரசியல் பேதங்களைக் கருத்தில்கொண்டு இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் செயற்பாடுகளில் தொடர்ந்தும் காலத்தைச் செலவழிக்கக் கூடாது. இது குறித்து மாற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு கூறினார் அகில இலங்கை அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் சங்க பொருளாளர் முடித்த கருணா முனி.

அகில இலங்கை அஞ்சல் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் சங்கத்தின் வட பிராந்தியக் கிளையின் 41ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் அஞ்சல் அத்தியட்சகர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் ஆ.சுந்தரலிங்கம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

மேற்படி பொதுக்கூட்டத்தில் தாய்ச்சங்கத்தின் பொருளாளர் முடித்த கருணா முனி தொடர்ந்து உரையாற்றும்போது -

இலங்கை இனப்பிரச்சினைக்கு பொருத்தமான தீர்வு ஒன்றைக் காணுவதில் கட்சி - அரசியல் பேதங்களுக்கு இடமளிப்பது மேலும் அழிவுகளை ஏற்படுத்தும். இதனைக் கருத்தில் கொண்டு இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு விரைவாகக் காணப்படவேண்டும். இதற்கு சகல ஒத்துழைப்புக்களையும் எமது சங்கம் வழங்கத் தயாராக இருக்கின்றது - என்றார்.

இந்தக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் ச.சிவராசசிங்கம் தமது உரையில் -

பிராந்திய ரீதியில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட தாய்ச்சங்கப் பிரதிநிதிகள் எமது பிரதேசத்தின் உண்மையான நிலைப்பாட்டைக் கண்டு உணர்ந்துள்ளனர்.

மிகவும் நெருக்கடியான வேளையில் அஞ்சல் உத்தியோகத்தர்களின் பணிகள் சிறப்பாக நடைபெற்றன. இதற்கான வளவசதிகள் ஏற்புடைய விதத்தில் இல்லாத போதிலும் மக்களுக்கான சேவைகள் நிறைவு செய்யப்பட்டன - என்றார்.

தாய்ச்சங்கத்தின் இதழ் ஆசிரியர் வெலிவித்த உரையாற்றும் போது:-

வாழ்க்கைச் செலவின் உயர்வுக்கு ஏற்றவிதத்தில் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும். ஊழியர்களுக்கான சம்பள உயர்வுகளை பெற்றுக்கொடுக்கும் ஒன்றுபட்ட போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கவேண்டும். - என்றார். (எ-11)

# கந்தன் கழல் போற்றி வந்த வினை நீக்கி சிந்தை தெளிவுபெற உதவும் கந்தஷஷ்டி

முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் முருகன். அருள்தரும் அலங்கார கந்தனாக, கண்கண்ட தெய்வமாக, சங்கப்புலவனாக, தந்தைக்கு உபதேசித்த சுவாமிநாதனாக, அமரர் இடர்தீர சமரம் புரிந்த குமரனாக, கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்கும் களிப்புடையவனாக, திகழ் சரவணத்தோனாக, வேற்புடையவனாக, பக்தர்களின் நெஞ்சில் நீங்காத இடம்பிடித்துவிட்டார்.

''சரவணபவ''என்ற நாமத்தை ஓத வந்த வினையும் வருகின்ற வினையும் அகன்றிடும், சரணகமலாலயத்தை அரைநிமிட நேரத்திலாவது தவமுறை தவறாது தியானிக்கவேண்டும். மருவுமடியார்கள் மனதில் நின்று விளையாடுபவர் குமரன்.

முருகப்பெருமானை ஆராதிக்கும் முக்கிய விரதங்கள் வாரவிரதம், நட்சத்திர விரதம், திதிவிரதம் என மூவகைப்படும். வாரவிரதம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் கைக்கொள்ளப்படும். மாதந்தோறும் கார்த்திகை நட்சத்திரத்தில் முருகப்பெருமானைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் விரதம் நட்சத்திரவிரதம் ஆகும்.

மேலே கூறப்பட்ட இரண்டு விரதங்கள் தவிர அவற்றிற்கு மேலானதும் சிறப்பானதுமானது கந்தஷஷ்டி விரதமாகும். இவ்விரதம் ஐப்பசி மாதத்து தீபாவளி அமாவாசையை அடுத்த வளர்பிறைப்பிரதமை முதல் ஷஷ்டி ஈறாகவுள்ள ஆறுநாள்கள் அனுஷ்டிக்கப்படும் விரதமாகும். இவ்விரதம் சகல செல்வங்களையும் சுகபோகங்களையும் தரவல்லதோடு புத்திர லாபத்திற்குரிய சிறப்பான விரதமாகும். "சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்" என்ற பழமொழியின் உட்கருத்தாவது ஸ்கந்தஷஷ்டியில் விரதமிருந்தால் மக்கட்பேறு உண்டாகும்" என்பதை உணர்த்துகின்றது.

முதல் வருடம் எப்படி விரதத்தை கைக்கொண்டோமோ அதேபோன்று ஆறு அல்லது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு தொடர்ந்து இருக்க வேண்டும்.

ஐப்பசி வளர்பிறை பிரதமையன்று நீராடி நித்திய அநுட்டானங்களைச் செய்து, முருகன் ஆலயம் சென்று அங்கேயே அன்ன ஆகாரமின்றி விரதமிருப்பர். திருச்செந்தூர் போன்ற தலங்களில் வீடுகளுக்கு செல்லாமல



ஆலயத்திலேயே தங்குவது வழக்கம். தண்ணீர் கூட அருந்தாது ஆலயத்தில் தரும் பானத்தை மட்டும் பருகி விரதமிருப்பது உத்தமத்தில் உத்தமம்.

கந்தஷஷ்டி விரதகாலத்தில் முருக ஜபம், கந்தபுராணம் படித்தல், கேட்டல் முதலியவை நற்பலன் அளிக்கும். முருகன் பெருமைகளை நினைத்தும், பேசியும் வழிபட வேண்டும்.

இவ்விரதத்தின் மகிமை கந்தபுராணத்தில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. தனது அரசு செல்வங்கள் அனைத்தையும் இழந்த முசுகுந்தச் சக்கரவர்த்தி வசிட்ட முனிவரின் உபதேசப்படி இந்த விரதத்தை முறைப்படி அநுட்டித்துத்தான் இழந்த அரசு மற்றும் செல்வங்கள் அனைத்தையும் திரும்பப்பெற்றதோடு முருகப் பெருமானுடைய சேனைத்தலைவர்களாகிய வீரவாகுதேவர் ஆகியோரையும் தனது துணைவர்களாகவும் பெற்று நீண்டகாலம் சிறப்புடன் செங்கோலோச்சி இறுதியில் தனது சுற்றத்தோடு முருகனடி சேர்ந்தான் எனக் கந்தபுராணம் கூறும்.

இந்தக் கந்தஷஷ்டி நாள்களும் முருகப் பெருமான் சூரபன்மன் முதலாய அசுரர்களுடன் போரிட்டு அவர்களை அழித்தொழித்ததன் மூலம் இந்த உலகத்தில் அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிலைபெறச் செய்தார். குறிப்பிட்ட ஆறுநாள் போரும் ஆறு பகைகளையும் வெல்லுதலைக் குறிக்கும். முப்பொருள் உண்மையை விளக்குதலே ஷஷ்டி விரதத்தின் நோக்கம் எனலாம். மேலும் ஆன்மாக்களாகிய எம்மைத்துன்பத்துள் ஆழ்த்தி நிற்கும் காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறு பகைகளையும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களை வெற்றி கொண்டு ஆண்டவனைச் சென்றடைய வேண்டுமென்ற உண்மையையே கந்தஷஷ்டி விரதமும், கந்த புராணமும் வலியுறுத்துகின்றது.

உரும்பிராய் நந்தன்

கந்தஷஷ்டி காலத்தில் கந்தன் புகழ் பாடி, கந்தன் கழல் பணிந்தால் அவனருளால் ஆறுபகைகளை வெல்லமுடியும். மனக்குழப்பம் நீங்கி ஞான ஒலி பெறு. கர்வம் அடங்கும் மலை போன்ற துன்பம் நீங்கும் மனத் தூய்மையும் வேண்டும் எங்கும் கிடைக்கும்.

# குண்டு வெடித்து தந்தை, தாய், மகள் பலி!

பொலன்னறுவை அரலகங்விலப் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் கடந்த வியாழன் இரவு குண்டு ஒன்று வெடித்ததில் மூவர் கொல்லப்பட்டனர். தந்தை, தாய், மகள் ஆகியோரே கொல்லப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

குண்டு வெடித்ததில் தாயும் மகளும் அதே இடத்தில் கொல்லப்பட்டனர் எனவும், தந்தை பொலன்னறுவை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்படும் வழியில் இறந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கே.சோமரத்ன (வயது 35), ஏ.ஜீ. வயலட் (வயது 32), எம்.எம்.சுசன்திகா (வயது15) ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர். இவர்கள் வீட்டுத்தோட்டத்தை துப்புரவு செய்து கொண்டிருக்கையில் கண்டெடுக்கப்பட்ட குண்டை பரிசோதித்துப் பார்க்கையிலேயே அது வெடித்தது எனக் கூறப்பட்டது. (ஐ)


## 2 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்
## HAPPY BIRTHDAY
## செல்வன் இ.சாருஷன்



மந்துவிலைச் சேர்ந்த இராசபுவனேஸ்வரன் – கரணவாயைச் சேர்ந்த சிவாநிதி தம்பதிகளின் செல்வப்புதல்வன் சாருஷன் தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று (26.10.2003) ஞாயிற்றுக்கிழமை கரணவாயில் கொண்டாடுகின்றார்.

சாருஷனை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, இந்தியாவில் இருக்கும் அம்மம்மா, சித்தி, அத்தை, பிரான்ஸில் இருக்கும் மாமாமார், அத்தை, மச்சாள், லண்டனில் இருக்கும் மாமா, கனடாவில் இருக்கும் பெரியம்மா, பெரியப்பா, அண்ணாமார், மந்துவிலில் இருக்கும் சிவம் சித்தப்பா, அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார், மாமா, மச்சான்மார், மீசாலையில் இருக்கும் பெரியப்பா, பெரியம்மா, அக்காமார் மற்றும் உற்றார், உறவினர் யாவரும் செல்வச்சந்நிதி முருகன் அருளால் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

கரணவாய் கிழக்கு.
கரவெட்டி.

(23893) (25-15-19-21)

தகவல்:
குடும்பத்தினர்.



## நவீன யுகத்தின் புதிய களைநாசினி



## "ரசிடவுன்"

வயல்களிலும், தரிசு நிலங்களிலும்
கோரை, அறுகு, பாதீனியம போன்ற களைகளை
ஒரே தடவையில் முற்றாகக் கட்டுப்படுத்த

சி.ஐ.சியின் அதி விசேட தயாரிப்பான

"ரச்டவுன்" களைநாசினியைப் பாவியுங்கள்.

மற்ற எந்தக் களைநாசினியிலும் இல்லாத சிறப்புத் தன்மை இதிலுண்டு.

★ இதில் கிளைபோ சேற்றுடன் றைமேசியம் இரசாயனம் கலந்து இருப்பதனால், களைகளின் வேர்களை, கிழங்குகளைச் சிறந்த முறையில் ஊடுருவித் தாக்கி முற்றாக அழிக்கின்றது.
★ மழையினால் பாதிப்படையாது.
★ பயிர் செய்யும் மண்ணுக்கு ஒருவித பாதிப்பும் இல்லை.

சகல விவசாய உள்ளீட்டு விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.
"சி.ஐ.சி. விவசாய இரசாயனங்கள், உரவகைகள் என்றும் தரத்தில் சிறந்தவை"


CIC
கெமிக்கல் இன்டஸ்றீஸ் (கொழும்பு) லிமிட்டட்.
199, கியூ வீதி, கொழும்பு 02.
கிருமிநாசினிகள் அபாயகரமானவை அவதானமாகப் பாவிக்கவும். (23873) (14-19-15)



## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தாயவள் மகிழ்ந்திட
05-11-1968

காலனவன் கவர்ந்திட
27-10-2000



### அமரர் திரவியம் விஷியதரன்

திதி: பூர்வபக்க பிரதமை 26.10.2003

எனது அன்புச் செல்வமே விஷி!
பாசத்தின் சுமையோடு பறந்து சென்று
மூன்று ஆண்டுகள் ஆனதையா – அப்பாவிடம்
அருகில் இருப்பதாக ஏழை மனம் சொல்லுதையா
நீர் வாடாமலர் என்று எண்ணினேன்
நீர் வாடி விழுந்த நாள்முதல் – ஆறவில்லை
என்சோகம் மாறவில்லை என்வேதனை – இரு
விழி சிந்திய நீர் இன்னமும் காயவில்லை
உனது பூ முகம் காணத் துடிக்கின்றேன் – அம்மா.
உனது ஆத்மா சாந்திபெற சிவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(23994)

நிரந்தர முகவரி:
நாவற்குழி.
தற்காலிக முகவரி:
38/9, மருதடி வீதி,
நல்லூர்.

உன் பிரிவால் துயருறும்:
அன்பு அம்மா, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனி, மக்கள்,
உற்றார், உறவினர்.



## வீட்டில் இருக்கும் முதியோரை, நோயாளரைப் பராமரிக்கும் சேவை

CHS
CEYLINCO HOME NURSING SERVICES

உங்கள் உற்றார், உறவினரைப் பராமரிக்க வீட்டில் ஒருவர் இல்லையே! என்று கவலையா?

கவலையை விடுங்கள்!



இதோ! தேசமானிய லலித் கொத்தலாவலையின் சேவைகளில் ஒன்றான பயிற்றுவிக்கப்பட்ட உதவித் தாதியர் நிறுவனம் உங்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டிக் காத்திருக்கின்றது. உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

முதலாவது மாடி,
173, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
T.P.222 6256 (24019)

சிலிங்கோ கூட்டுநிறுவனம்,
சிலிங்கோ வீட்டுத் தாதிய
பராமரிப்புச் சேவை.



## சுன்னாகம் வாழ்வகத்திற்கு அனுபவம் உள்ள பணியாளர்கள் தேவை

மேற்படி வாழ்வகத்திற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் தேவை.

(1) சமையல் அனுபவம் உள்ள வேலையாள் (பெண்) வயதெல்லை 50இற்கு மேல் இருக்க வேண்டும். வெற்றிடம் ஒன்று.
(2) மேற்பார்வையாளர் (பெண்) வயதெல்லை 50இற்கு மேல் இருக்க வேண்டும். கல்வித்தகைமை க.பொ.த(உ/த)தமிழ், ஆங்கிலம் பேசக்கூடிய ஆற்றல் உள்ளவராய் இருக்க வேண்டும்.
(3) தோட்ட வேலையில் திறமைமிக்க தொழிலாளி (ஆண்) வயதெல்லை 45இற்கு மேல் இருக்க வேண்டும்.

வாழ்வகத்தில் தங்கியிருந்து கடமை செய்யக்கூடியவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும். ஒக்ரோபர் 2003, 31ஆம் திகதிக்கு முன் கடமை நாள்களில் கீழ்க்காணப்படும் ஆவணங்களுடன் வருகை தரும்படி அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன். சம்பளம் நேரில் பேசித் தீர்க்கப்படும்.

(அ) இரு நற்சான்றிதழ்
(ஆ) தேசிய அடையாள அட்டை
(இ) கல்விச் சான்றிதழ்
(ஈ) சுயவிவரக் கோவை

போக்குவரத்துச் செலவுகள் கொடுக்கப்படமாட்டாது.

சபாபதிப்பிள்ளை வீதி,
மருதனார்மடம், சுன்னாகம். (35-15-19-21)

நிர்வாகி,
வாழ்வகம்.

(23995)



உ

## துணவி அரசடிப் பிள்ளையார் கோயில், வட்டுக்கோட்டை
## நிரந்தரப் பூசகருக்கான வெற்றிடம்

☆ எமது ஆலயத்தில் மூன்றுகாலப் பூஜையை நேரந்தவறாது நடத்துவதற்கு ஆசாரமும் நல்லொழுக்கமுமுள்ள நிரந்தரப் பூசகர் ஒருவர் உடனடியாகத் தேவைப்படுகின்றார்.
☆ ஆலயத்திற்கு அண்மித்ததான பிரதேசத்தில் வசிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும். இருப்பிட வசதிகள் செய்துகொடுக்கப்படும்.
☆ நியாயமான மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும். அதுபற்றி நேரில் பேசி இணக்கத்திற்கு வரமுடியும்.
☆ பரிபாலன சபையினரோடு ஒத்துழைத்துப் பணியாற்ற விருப்பமும் பொறுப்புணர்வும் சமயப்பற்றும் தகைமையுமுள்ள சிவாச்சாரியார்கள் அல்லது சைவக்குருமார்கள் 05.11.2003 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

காரியதரசி, பரிபாலன சபை,
துணவி அரசடிப் பிள்ளையார் கோயில்,
வட்டுக்கோட்டை.

தொலைபேசி இல:
077 - 6154201 (23989) (25-21-15-19)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29
01
1934

மறைவு
05
11
2002



### அமரர் மாணிக்கம் திருஞானமூர்த்தி

(ஓய்வுபெற்ற உதவி விநியோக உத்தியோகத்தர்,
கடதாசிக் கூட்டுத்தாபனம், வாழைச்சேனை)

திதி: 26-10-2003

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்.
அன்பாய் ஆதரவாய் பண்பாய் வாழ்ந்த அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

'சிதம்பர வாசா',
கைதடி மேற்கு,
கைதடி. (24022) (32-21-15-19)

என்றும் உங்கள் நினைவுடன்
இருக்கும்:
மனைவி, பிள்ளைகள்.

# கற்றலில் மன வெறுப்பை ஏற்படுத்துவதும் துஷ்பிரயோகமே!

## சிறுவர் தின விழாவில் பேராசிரியர் சபா.ஜெயராசா

வலிகாமம்தெற்கு,ஒக்.26

'உளவியல் ரீதியாக ஒரு மாணவனுக்கு துன்பத்தை ஏற்படுத்தி கற்றலில் கசப்பை - வெறுப்பை உண்டாக்குவது கூட ஒரு வகையிலேயே துஷ்பிரயோகம் என்றே கூறவேண்டும்.

சர்வதேச சிறுவர் - முதியோர் தினவிழா உடுவில் பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய இராமநாதன் நுண்கலைப் பீட நடனத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா.ஜெயராசா மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் பிரதேச செயலக மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் எஸ்.ஆர்.ஜெயப்பிரகாசம் தலைமையில் விழா நடைபெற்றது.

பேராசிரியர் சபா.ஜெயராசா தமது உரையில் மேலும் கூறியதாவது:-

சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது, போதை வஸ்துக் கடத்த அவர்களை பயன்படுத்துவது சிறுவர்களின் முகத்தில் காயங்களை ஏற்படுத்தி அவர்களை பிச்சை எடுக்கவிட்டு அந்தப் பிச்சைப் பணத்திலே வாழ்வது போன்றவைகள் மட்டும் துஷ்பிரயோகம் அல்ல, பிள்ளைகளை வளர்க்கின்ற முறை, பாடசாலைகளில் கொடுக்கப்படும் கல்வி முறை என்பன சரியாக அமைக்கப்படாவிட்டாலும் அதுவும் ஒருவகை துஷ்பிரயோகமே.

எமது நாட்டிலே பாடசாலைக்கு செல்லாத சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கற்கவேண்டிய வயதிலே பல சிறுவர் தெருவோரங்களில் நின்று விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். சிறுவர்களின் விருத்தி முன்னேற்றத்தில் இது ஒரு துன்பம் தரும் நிலை.

இடைவிலகல் மற்றொரு பிரச்சினை, வறுமைநிலை காரணமாக பாடசாலைக்குச் செல்லாமல், படிக்க வேண்டிய வயதிலே வருமானத்திற்காக தமது சக மாணவனின் செருப்பைப் பாடசாலை வாசலில் வைத்து தைத்துக்கொடுத்துப் பிழைக்கும் நிலை கண்டு அண்மையில் புகைப்படநுட்ப பயிற்சி செயல் அமர்வை நடத்த வந்த யுனெஸ்கோ நிபுணர் ஆச்சரியப்பட்டுள்ளார்.

சிறுவர்களை கேடுறுத்தல் பல வகைகளில் நடத்தப்படுகின்றன. அவர்களை சரியான முறையில் அணுகாமல், அவர்களின் ஆற்றல், சிருஷ்டித திறன்களை மூழ்கடித்து விடுகின்றோம்.

பாடசாலை கற்பித்தல் முறை மாணவனுக்கு துன்பத்தையும், வேதனையையும், சுமையையும் தரும் கற்பித்தலாக மாறி வருகின்றது. இதனால், பிள்ளை வீட்டில் நிற்பதை மகிழ்ச்சியாக கருதுகிறான். இந்த கற்பித்தல் முறையிலே அடிப்படை மாற்றம் தேவை. மாணவனின் உளவியல் நிலைகளை அறிந்து கற்பித்து கல்வியில் மகிழ்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

முதியவர்களின் குரல்கள், அனுபவங்கள், மொழிகள் எல்லாம் எமக்கு இன்பம் தருவனவாக - ஆதரவு தருவனவாக உள்ளன. முதியோர்களின் ஒவ்வொரு சொல்லும் தேவவாக்கு தங்கம் போன்ற சொத்து அவர்கள்.

மேலைநாடுகளில் முதியவர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்பும் நிலைபோல் எங்கள் நாட்டிலும் அவை பரவியுள்ளன. முதியோர் இல்லங்களுக்கு அவர்களை அனுப்பவது ஒரு தவறான முறை என சமூகவியலாளர்கள் கருதுகின்றனர்.

வீடுகளிலே முதியவர்களை வைத்துப்பராமரிக்கின்ற கூட்டுக் குடும்ப முறை. எமது பண்பாட்டு முறையை நாம் காப்பாற்ற வேண்டும்.

முதியோர் இல்லங்களில் நல்ல உணவு, பொழுதுபோக்கு அவர்களுக்குக் கிடைத்தாலும், உளவியல் பாதுகாப்பு அவர்களுக்கு கிடைப்பதில்லை. தமது இன்பதுன்பங்களை பகிர்ந்து கொள்ள குடும்ப உறுப்பினர்கள் அங்கில்லை. வாழ்க்கையிலே வெறுப்பும் கசப்பும் அவர்களுக்கு ஏற்படுகிறது. எமது பாரம்பரியமான முதியவர்களை எமது குடும்பங்களுடனேயே வைத்து பராமரிக்கின்ற நிலை வளர வேண்டும் - என்றார்.(எ-152)

# சமாதான முயற்சி மூலம் நாட்டுக்கு நிரந்தரத் தீர்வு

## பிரதமர் ரணில் நம்பிக்கை

கொழும்பு,ஒக்.26

அரசின் சமாதான முயற்சி மூலம் நாட்டிற்கு நிரந்தரத் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடவத்தைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற பொதுமக்களுடனான சந்திப்பின்போது பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அரசு முன்னெடுத்துவரும் அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாக விரிவாக விளக்கிய பிரதமர், இந்த விடயங்களை மக்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியம் எனவும் குறிப்பிட்டார்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள உத்தேச அபிவிருத்தித் திட்டங்களில், துறைமுகம், விமான நிலையம் என்பவற்றுக்கான அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் மேலும் தெரிவித்தார். மேலும், இப்பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளை வழங்கும் பொருட்டு விசேடத் திட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். (ஐ-8)

### புயலால் வீழ்ந்த வீட்டினுள் சிக்கி ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஒக்.26

பலமாக வீசிய காற்றினால் சரிந்து வழ்ந்த வீட்டினுள் அகப்பட்டு ஒருவர் படுகாயமடைந்தார்.

அராலி மத்தியில் நேற்று முனதினம இடம் பெற்ற இச்சம்பவத்தில் வைரவநாதன் சில்வெஸ்டர் (வயது-37) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ)

### தீபாவளிக் கலைவிழா

வலி.தெற்கு,ஒக்.26

தீபாவளித் தினத்தை முன்னிட்டு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தாக சபையினரின் அனுசரணையுடன் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களால் இன்று காலை ஒன்பது மணிக்கு தீபாவளிக் கொண்டாட்ட நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

மானிப்பாய் மருதடிவிநாயகர் ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசை, கூட்டுவழிபாடு என்பவற்றில் கலந்துகொள்ளும் அறநெறிப் பாடசாலைப் பிள்ளைகள், ஆலயதர்மகத்தா சபைத் தலைவர் ந.சிதம்பரநடராசா தலைமையில் தீபாவளி சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்துவர்.

பாடசாலை பிள்ளைகளின் பேச்சு, கவிதை இன்னிசை நிகழ்வுகளும், சமூகஜோதி கா.கணேசதாசனின் "தீபாவளியும் தேசிய நலனும்" என்னும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (எ-152)

# ஐந்து சந்திப் பகுதியில் வீதியோரம் பழைய இரும்பு

## போக்குவரத்துக்கு இடையூறு எனமுறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.26

யாழ் ஐந்து சந்திப்பகுதியில் வீதியின் இரு மருங்கிலும் பழைய இரும்புகள் குவிக்கப்பட்டுள்ளதால், அப்பகுதியில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது.

வீதியை அண்டியதாக இரும்புகள் குவிக்கப்பட்டுள்ளதால், இவ் வீதியூடாகப் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் விபத்துக்கு உள்ளாகுதல் மற்றும் ஒரு வாகனம் செல்லும் போது மற்றைய வாகனம் அதனைக் கடந்து செல்ல முடியாத நிலை என்பன ஏற்றட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

வாகனச் சாரதிகள் மட்டுமன்றி வீதியூடாகப் பயணிக்கும் பொதுமக்களும் நெருககடிக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-8)

# பதிவு செய்யப்படாத மருந்து விற்றவருக்கு அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.26

நெல்லியடிப் பிரதேசத்தில் பதிவு செய்யப்படாத மருந்தை விற்பனைக்கு வைத்திருந்த நபருக்கு பருத்தித்துறை நீதிமன்றினால் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட உணவு, மருந்து வப் பரிசோதகர் ரி.மகாதேவன் இது தொடர்பான வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். பதிவு செய்யப்படாத வின்ரோஜன் மருந்தே விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை -

உரப்பைகளில் எடுத்துச் சென்று பணிஸ் விற்பனையில் ஈடுபட்ட நபருக்கும் பருத்தித்துறை நீதிமன்றினால் ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வதிரி, மாலிசந்தியில் உள்ள வெதுப்பகம் ஒன்றில் இருந்து இரண்டு உரப்பைகளில் பணிஸ் எடுத்துவந்து அதனை சைக்கிள் கரியலில் தொங்கவிட்டவாறு விற்பனை செய்தமைக்காக நெல்லியடி பொதுச்சுகாதார பரிசோதகர் க.இளங்கோவினால் குறிப்பிட்ட நபர் மீது வழங்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறிப்பிட்ட நபருக்கு ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன், பணிஸ் யாவும் பறிமுதல் செய்யப்பட்டது. (எ-10)

# கசிப்பு உற்பத்தி வழக்கில் ஒரு லட்சம் ரூபா அபராதம்


கசிப்பு உற்பத்தி செய்தமை, உபகரணங்களை வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களுக்காக கைது செய்யப்பட்டவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபா தண்டமாக விதிக்கப்பட்டது.

ஆனைக்கோட்டை 3ஆம் கட்டையைச் சேர்ந்த சிவஞானம் சதானந்தன் என்பவருக்கே மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன் இந்தத் தண்டனையை விதித்துள்ளார்.

மானிப்பாய் பொலிஸாரால் 8 போதல் கசிப்பு மற்றும் 222 போத்தல் கோடா மற்றும் கசிப்பு காய்ச்சும் உபகரணங்களுடன் கைது செய்யப்பட்ட மேற்படி நபர் கடந்த புதனன்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

உரியவர் உடனடியாக 10 ஆயிரம் ரூபா செலுத்தியதுடன் மிகுதித் தொகையை செலுத்தும் வரை 50 ஆயிரம் ரூபா கொண்ட இரு ஆள் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். (எ-86)

## கல்விச்சாலைக் காட்சிகள்



யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி வணிக மன்றத்தின் வணிக ஒளி சஞ்சிகை வெளியீட்டில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் த.இராசலிங்கம் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். மன்றத்தின் தலைவர் செல்வன் தவசுதன், கல்லூரி அதிபர் என்.வன்னியசிங்கம், யாழ். கல்விக் கோட்ட அதிகாரி எஸ்.எஸ்.தங்கராஜா ஆகியோரும் படத்தில் உள்ளனர். (எ-10)



உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரிக்கு லண்டனில் வசிக்கும் கல்லூரியின் பழைய மாணவர்களான சகோதரர்கள் இருவரால் ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. கல்லூரி அதிபர் சி.நடராஜாவிடம் பழைய மாணவர்களின் தந்தை இ.ஒப்பிலாமணி நூல்களை வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ-10)



கொக்குவில் சி.சி.த.க. பாடசாலைக்கு, பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் குடும்பத்தினால் மின்இணைப்புச் செய்து கொடுக்கப்பட்டது. மின் ஆளியை முன்னாள் ஆசிரியர் தே.ஜெயக்குமார் இயக்குவதைப் படத்தில் காணலாம். நல்லூர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயனும் படத்தில் காணப்படுகின்றார். (எ-10)




கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் ஆங்கில வாய்மொழி பயிற்சிநெறி சான்றிதழ் வழங்கும் விழாவில் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் உரையாற்றுவதை படத்தில் காணலாம். வடமராட்சி கல்விக் கழகப்பொறுப்பாளர் தாயகன், அதிபர் இ.ராகவன், கரவெட்டி கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் அம்பலவாணர் ஆகியோர் படத்தில் காணப்படுகிறார்கள்.

*(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

Now Available At Jaffna

EASY COOK

Rs. 7990/=

FAT-FREE COOKING
- SELF CLEANING
- SAVES TIME
- PORTABLE KITCHEN
- BROWNS & CRISPS
- FAST AND EASY
- SAVES MONEY

Slip in-Slip out Easy Clean HERCULEAN BOWL

COOKS 8 WAYS

| | |
|---|---|
| BAKE | Cake/Pies Scones Bread |
| GRILL | Steak/Chops Sausages/ Bacon Cheese Melts |
| STEAM | Vegetables Fish/ Shellfish Chicken |
| REHEAT | Left-Overs Pizza Casseroles |
| ROAST | Pork/Vegetables Chicken Beef/Lamp |
| DRY FRY | Chips Crumbed Food Rissoles |
| THAW | Chicken Roasts Pies |
| BBQ | Kebabs Steak/Chops Sausages |

LG Digitally yours

JAFFNA ELECTRICALS

Authorised Dealer For Abans

141, POWER HOUSE ROAD, JAFFNA TEL: 021-222-5766

(C/30767)



தீபாவளித் திருநாள்

அதிரடி விலைக்கழிவு

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கணனிகள்

| Motherboard | Processor | RAM | Hard Disk | with 14" Monitor |
|---|---|---|---|---|
| Pentium I | 200 MHz | 32MB | 2.4GB | 13,400 |
| Pentium II | 300 MHz | 64MB | 3.2GB | 19,400 |
| Pentium II | 350 MHz | 64MB | 6.4GB | 21,400 |
| Pentium II | 400 MHz | 64MB | 4.3GB | 23,900 |
| Pentium III | 450 MHz | 128MB | 4.3GB | 31,400 |
| Pentium III | 450 MHz | 128MB | 8.4GB | 34,400 |

All above configuration includes soundcard, CD ROM, Floppy Drive, Keyboard, network card and Mouse.

Cheapcom Private Limited

Campus Junction
Palaly Road,
Thirunelvely,
Jaffna.
Hot line: 077 766 1216

Head office:
7-1/4A, Orchard Shopping Complex,
Galle Road, (opp. Savoy Cinema)
Wellawatte.
Tel: 011 250 8870, Fax: 011 236 1248



யாழ் குடாநாட்டு..... மாணவர்களே!
இலங்கை சுற்றுலாத்துறையுடன் இணைந்து பயிற்சிகளை மேற்கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம் இதோ!
அரச சார்புடைய...

## SRI-LANKA INSTITUTE OF TOURISM & HOTEL MANAGEMENT

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் ஹொட்டேல் முகாமைத்துவம் - யாழ்ப்பாணம்.

(FORMER CEYLON HOTEL SCHOOL & SCHOOL OF TOURISM)

Study entirely in Sri Lanka & earn an Internationally Recognized Diploma In Hotel & Catering Management

Course Commences In December 2003

Diploma in Hotel & Catering Management

வயது எல்லை: 5 டிசெம்பர் 2003 அன்று : 17வயது - 25வயது வரை

Closing date: 5th NOV 2003

கற்கை நெறிகள் ஆகக்குறைந்த தகைமைகள்

NEW ADMISSION

Hotel Reception (5 Months)
Hotel House Keeping (5 Months)

இரண்டு அமர்வுக்கு மேற்படாது G.C.E. (O/L) இல் 6 பாடங்கள் (3 பாடங்கள் திறமைச்சித்தியும் ஆங்கிலம் & கணிதம் சாதாரண சித்தி போதுமானது.

RE ADMISSION

Hotel Reception (5 Months)
Hotel House Keeping (5 Months)

1) ஹொட்டல் பாடசாலை பரீட்சைகளில் A or B சித்தி பெற்றவர்கள்
2) 10.12.2003 இற்குள் IT பயிற்சியை முடித்தவர்கள்.
3) 13.12.2003 இற்குள் IT பயிற்சிப் பெறுபேறுகள் இங்கு கிடைக்கக் கூடியதாக இருப்பவர்கள்.

CRAFT LEVEL

Hotel House Keeping (4 Months)

இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்கள் சித்தி (ஆங்கிலம் சித்தியும்)

குறிப்பு:-
1) விண்ணப்பப் படிவங்களை ரூ.50 செலுத்தி அலுவலகத்தில் கற்கை நெறிகள் பற்றிய தெளிவான விவரங்களுடன் பெற்றுக்கொள்ளலாம்.
2) ரூ.50 மணிஓடர் மூலம் விண்ணப்பப் படிவங்களை பெற விரும்புவோர் சுயமுகவரியிடப்பட்ட நீளத் தபாலுறையுடன் ரூ.4.50 முத்திரையும் சேர்த்து அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.
3) ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

*Principal*
*Sri -Lanka Institute or Tourism & Hotel Management*
*15, Sirampiady Lane, Maniams Building (Near IT Park)*
*Off Stanley Road, Jaffna.*
*Tel/Fax: 021-2223642*

MINISTRY OF TOURISM

(24045)(35-11-18)



# நிலவு.COM இன் தமிழ் கணினி - 2003

# மாபெரும் கண்காட்சியும் விற்பனையும்

இடம்: யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடம்
காலம்: 27.10.2003 முதல் 02.11.2003 வரை காலை 9 மணி முதல் பி.ப. 7.00 வரை

### பாடசாலை மாணவர்களுக்கு

– கல்வித்திணைக்கள அனுமதி பெற்றது –

★ நல்லூர் கல்விக்கோட்ட பாடசாலைகள் –
27/10/2003 திங்கட்கிழமை

★ யாழ். கல்விக்கோட்ட பாடசாலைகள் –
28/10/2003 செவ்வாய்க்கிழமை

★ கோப்பாய் கல்விக்கோட்ட பாடசாலைகள் –
29/10/2003 புதன்கிழமை

★ ஏனைய பாடசாலைகள் –
30/10/03 வியாழன், 31/10/03 வெள்ளி

காலை 9.00 மணிமுதல் பி.ப. 3.00 மணிவரை
பாடசாலையூடாக மாணவர்களுக்கு
மட்டும் கட்டணம் 5/=

ஏனையோருக்கு : 27-10 முதல் 31-10 வரை
பி.ப. 3.00 மணிமுதல் பி.ப. 7.00 மணிவரை
01-11, 02-11 நாள்களில் காலை 8.00 மணிமுதல்
பி.ப. 7.00 மணிவரை அனுமதி 10/=

### கண்காட்சிப் பொருள்கள்

★ அலுவலக பாவனைக்கான தமிழ் மென்பொருள்கள்
★ தமிழ் தட்டச்சுப் பலகைகள் (Key Boards)
★ தமிழில் முதல் கணினி மின்னிதழ்
★ மென்பொருள் கற்றலுக்கான தமிழ் விளக்கம்
★ குழந்தை பாடல்கள், கதைகள், விளையாட்டுக்கள்
★ ஜோதிடம் ★ யோகா ★ திருக்குறள்
★ தமிழ் தட்டச்சு ஆசான்
★ இன்னும்..... இன்னும்.... தமிழில்.....
★ தமிழ்மூலம் புத்தகங்கள்
★ Word ★ Excel ★ Access ★ Internet
★ Page maker ★ E-Commerce
★ Oracle ★ C# ★ Web Designing
★ DTP ★ EX
★ இன்னும் பல இலங்கை இந்திய புத்தகங்கள்

நாடளாவிய ரீதியில் மாபெரும் தமிழ் கணினி 2003 பரீட்சை
முதலாம் பரிசு 25,000/-, 2ஆம் பரிசு 15,000/-, 3ஆம் பரிசு 10,000/-
★ சித்திபெறும் அனைவருக்கும் பெறுமதிமிக்க சான்றிதழ்கள்.

அனுசரணை:

கம்பியூட்டர் Info IT Island NIIT

ஊடக அனுசரணை:

உதயன்

(C/30770)

# கவிதைக் கணைகள்

## மானம் காத்த மறக்குடி வேந்தன்!



6

ஆக்கம்: புலவர் ம.பார்வதிநாதசிவம்

தகையறிந்தே பரிசளித்தான் புலவர்க்கெல்லாம்
தன் மகிழ்வை அன்பதனைத் தெரிவித்திட்டான்
நகரடைந்த அனைவர்க்கும் கொடை செய்திட்டான்
நாட்டினர்கள் யாவருமே மகிழ்ந்து நின்றார்.

“ஓரிருநாள் சென்ற பின்னர் தமிழ் போற்றாத
உள்ளத்தாற் கல் சுமந்து வந்தோரான
ஆரியரைச் சோழர்க்கும் பாண்டியர்க்கும்
ஆர்வமுடன் காட்டுகென” ஆணையிட்டான்
சேரமன்னன் ஆணையினை ஏற்றவீரர்
சிறந்த தமிழ்ப்பாண்டியர்க்கும் சோழர்க்கும்தான்
ஆரியரைக் காட்டி வந்தார் ஆரியர் தாம்
சேரனிடம் தம்முளத்தைத் தெரிவித்தார்கள்.

“முத்தகுடி தமிழ்க் குடியே முழுவீரர்
தமிழரே என்ற உண்மை
கேட்டறிந்தோம் ஆனாலும் கண்டறிந்தோம்
இந்நாளில் நிகழ்ந்த போரில்
ஆர்த்தெழுந்தோம் நின்முன்னே அதிசயித்தோம்
வாள்வீச்சைப் போரின் நுட்பம்
பார்த்தறிந்தோம் நின்போரில் படித்துவிட்டோம்
பாடங்கள் மன்னிப்பாயே!


சிறுபடையால் பெரும் படையைத் திணறவைக்கும்
போர் முறைகள் தெரிந்த வேந்தே!
உறு வலியால் உலகினது கவனத்தைக்
கணப்பொழுதில் கவர்ந்த வீரர்!
நெறிமுறைகள் பிசகாத நெஞ்சத்தோய்
பகைவருமே பணியும் போதில்
அறிவு சொல்லி அன்பு செயும் இயல்பு கொண்டோய்
எங்களைத் நீ மன்னிப்பாயே!

எம்மை நீ மன்னித்துச் சிறைவிடுத்தால்
வடநாடு முழுதும் சென்றே
செம்மை திகழ் நின்னாட்சி செழுமை திகழ்
நினது மொழி பற்றிலெல்லாம்
எம்மினிய மனதார எடுத்துரைப்போம்
வடநாட்டார் ஏற்கச் செய்வோம்
வெம்மை செயும் போராற்றும் வீரத்தின்
விளைநிலமே பொறுப்பாய் நம்மை!

அன்று வட நாட்டாராம் கனகனொடு
விசயனுமே இயம்பக் கேட்டே
கொன்றொழிக்கும் படைவலியோன் குளிர்ந்தமன
இயல்பினனாய் அவரை நோக்கி
“நன்றும்மை சிறை விடுத்தோம் வேண்டியவாம்
உதவியெல்லாம் செய்வோம்! நீங்கள்
இன்றே உம் நாட்டினிற்கே ஏகிடலாம்!”
என இரங்கிக் கூறினானே!

முற்றும்

## செம்மணியின் விண்ணப்பம்!



செம்மணியில்
எம்மணிகள் சொல்லும் செய்திகள்....

சக்தி FM மே!
மண்ணுக்குள் ஒரு
சக்தி உலா கொண்டுவா......
“நாங்களும் தமிழர்கள் தான்.”

டைலக்கே!
“மண்ணுக்குள் ஒரு லைன்தா”
நாம் மாண்ட கதையை
நம்முறவுகளிற்கு சொல்ல வேண்டும்

ஷம்புவே!
“நாங்கள் கற்பிழந்த”
கறை நீங்க - ஒரு
ஷம்பு கொண்டு வாராயோ

எங்களண்மை வந்து போகும்
நோர்வே.ஜப்பான்,அமெரிக்காவே
“எங்கள் மரணப்பத்திரங்களிற்கு”
ஒப்பமிட்டுப் போங்கள்.....

A-9 ஆல் பறக்குமெங்கள்
பாசத் தமிழ்களே!
நாம்வெகு தாகமாய் கிடக்கின்றோம்
உங்கள் காசுத்தண்ணீர் வேண்டாம்
உள்(ள) நீரொருதுளி தந்துபோங்கள்....

-சிவா-

## விபத்து நேர்ந்தது!

நெற்றியில்
நிலவாய் பிரகாசிக்கும்
திலகம்...!
கூந்தலில்
உதிர்ந்த மல்லிகை பூ
கிரீடம்....!
சுடிதாருக்குள்
சுத்தமாய் மேனி மறைய—
மழை பொழிந்து
மௌனமாயிருக்கும்
வானம் போல்
முக வடிவம்...!,
அதில்.....
ரோசாப் பூ உதடு!
படபடக்கும்
பறவை குஞ்சு சோடியாக
விழி ரெண்டு!
தேன்னிசை தென்றல் தேவாவின்
இசையாக — காதை
கால் கொலுசு தாலாட்ட
தேவதை ஒருத்தி
தெருவில் மிளிர்ந்தாள்.....
அத்தனை
அழகையும் ரசித்து வண்ணம்
நான் சென்றதால்
நடுவீதியில் விபத்துக்குள்ளானேன்.

தமிழ்ப்பிரியன்
வட்டுக்கோட்டை

## தெருவோரக் காதல்

துள்ளித் திரியும் பள்ளி வயதில் ~
பாழ்பட்ட காதல் வந்ததால்.......
தெருவோர ஆலமரம் புதுச்சுகம் தர ~
கல்லாசனத்தில் காத்திருப்புகள்....
மணிக்கணக்காய் வார்த்தை ஜாலங்கள்...
காதலின் கனவுகள் சுமந்து ~ பருவ
காலத்தினைக் கடத்தின!
காத்திருக்காத வாழ்க்கையோ
தொலைதூரம் செல்ல ~ கடைசியில்
காதலும் தன் முகவரி தொலைத்தது!
மீண்டுமொரு காதலை வாழ்த்த ~ அதே
ஆலமரமும் கல்லாசனமும்
தெருவோரமாய் இன்றும்!

-சி.சிவகௌரி, மட்டுவில்.

## வறுமை!

என் எண்ணக் கோலமதில்,
என்றும் நடமாடும்
சின்னஞ் சிறிதான
சிட்டுக் குருவியே
நீ அழகி தான் ~ அதற்காக
பேரழகியன்று ஏன் தெரியுமா?
பட்டாடைகளும் வண்ணப்
பொன்னகையும் உனதிடம்
இல்லையே என்பதனால்........
உலகில் வாழுமந்த
உத்தமரின் கருத்ததனை
மெலிதாய் பகர்கின்றேன்
மெலியலாள் நீ புரிந்திடுவாய்!
என் மனதின் கதவிடுக்கில்
கண்சிமிட்டி மெலிதாய்,
புன்னகைத்து வாடாமலராகுவாய்
இன்னும் நிலைத்துளாய் நீ!
அன்றொருகால் என்பாட்டில்
செல்கையிலே கண்டேனுனை
அந்தப் பிஞ்சு விழிமணிகளில்
இன்னும் தகிப்புடனே நீ.
பட்டாடை புனைந்து
பறந்தடிக்க வேண்டிய நீ
கிழிந்த ஆடையுடன்
கனவுகளை சுமந்தவளாய்......
உனது சோடனைகளவையற்ற
இனிய வதனமது
எனது மனதின் ஓரமதில்
படிந்துளது இன்று வரை
நிரந்தரமாய் ..........
வாழ்வது கடினமெனவுணர்ந்தும்
வாழ்த்துகிறேன் நீ வாழ்க!

ச.நிரஞ்சனி

## தடம் புரண்ட செய்தி

பார்வையே!
உன்னைப் பார்த்தேன்~ இன்று
என்னை மறந்தேன்
உனக்காக ஒரு கவிஞனாகி
கவிதை வடித்தேன்
பூத்துக் குலுங்கியது என்னுள்
ஒரு பூந்தோட்டம்.
சிற்பியாக நானிருந்து
சித்திரம் வரைந்தேன்~ என்
நாளைய கனவுகளை
ஒரு நொடியில் என் வாழ்வு
ரயில் தடம் புரண்டதடி~
பெண்ணே!
நாளை நீ வெளிநாட்டுக்கு
மணமகளாக புறப்படும்
செய்தி கேட்டு.....



பு.மைதிலி
திருநெல்வேலி கிழக்கு.

## வேண்டாத பயணங்கள்

பஸ்ஸிலே ஏறிச்சென்று
மக்களை இறங்கச் சொல்லி
ஐசி கேட்டனுப்பி வைக்கும்
பயணமினி நமக்கு வேண்டாம்.

பையினைக் கிண்டிப் பார்த்தும்
பாசலை கிழித்துப் பார்த்தும்
செய்கின்ற அநியாயப் பயணங்கள்
இனி நமக்கு வேண்டாம்.

கைகளை உயர்த்தச் செய்து
கால்களை அகட்டச் சொல்லி
உணர்ச்சிகள் கொந்தளிக்கும்
உபத்திரவப் பயணமினி வேண்டாம்.

நட்டநடு வெளியில்
முட்கம்பி பாதை ஓரங்களால்
முண்டியடித்தோடும்~ முனகல்
பயணங்கள் இனி நமக்கு வேண்டாம்.

இறங்கென்பான் ஒருவன்
ஏறென்பான் இன்னொருவன்
இரண்டையுங் கேட்டின்னற்படும்
பயணங்கள் வேண்டாம் இனியும்.

சுபா-ஜெகநாதன்
நல்லூர்.

# பிறந்தநாள் விழா அழைப்பு

HAPPY BIRTHDAY



## ஆ.நாகரத்தினம்

நாளை (27.10.2003) திங்கட்கிழமை எனது பிறந்தநாளை கொண்டாட இருப்பதால் உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து, பிறந்த நாள் விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

தகவல்:
*யாழ்.பரியோவான் கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.* (24073) (29-13-16) ஆ.நாகரத்தினம் (Ground Boy)

# வேலையாள்கள் தேவை

யாழ்.ஆஸ்பத்திரி முன்பாக இயங்கும் தேநீர்ச்சாலைக்கு 02 பாதுகாப்புக்கடமையாளர்கள் மற்றும் உணவுதயாரிப்பவர்கள், உணவு பரிமாறுபவர்கள் உடன் தேவை. நேரில் வரவும். சம்பளம் பேசித்தீர்க்கப்படும். தொடர்பு: நித்தியானந்தன் தேநீர்ச்சாலை, இல.514, ஆஸ்பத்திரி வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். (C/30773)(35-29-13-16)

மானிப்பாய் கோவில்பற்று ப.நோ.கூ.சங்கம்

# முக்கிய அறிவித்தல்

மேற்படி எமது சங்கத்தின் ஒத்திவைக்கப்பட்ட கிளைக்குழு உறுப்பினர்களுக்கான தெரிவுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகளுக்கமைய இன்று (26.10.2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

செயலாளர்,
ப.நோ.கூ.சங்கம்,
மானிப்பாய்.
(C/30769) (26-29-13-16)

# MOVIMONDO

## Walk in interview

**For the post of "Qualified Civil Engineer"**

A Vacancy exists in movimondo, Jaffna for a qualified Civil Engineer.
Applicants are expected to possess the following:
- ★ Must have been specialised in the construction works in Water & Sanitation sector.
- ★ Should have minimum 5 years experience in the same field.
- ★ Very good knowledge in spoken and written English.
- ★ Competant and experience in Ms-office computer package.
- ★ Filexible to travel between Jaffna and Kilinochchi
- ★ minimum 2 non related references.
- ★ Have the SriLankan driving licence to drive class 'C' and 'D' vehicles.

Interested qualified candidates are kindly requested to walk in interview - on 28.10.2003 (Tuesday) between 3-6 p.m. in our Jaffna office.
Selected candidates must be able to work immediately.
for Further inquiries, Contact 222-6089.

**Movimondo**
**28, Cathedral Street,**
**Jaffna.**
**T.P: 222-6089.** (24069) (31-29-13-16)

### விடை-மாதிரி வினாத்தாள்-I

| | | |
|---|---|---|
| 01. 2 | 02. 3 | 03. 1 |
| 04. 4 | 05. 3 | 06. 2 |
| 07. 4 | 08. 3 | 09. 4 |
| 10. 2 | 11. 1 | 12. 3 |
| 13. 4 | 14. 2 | 15. 3 |
| 16. 3 | 17. 2 | 18. 1 |
| 19. 3 | 20. 3 | 21. 2 |
| 22. 1 | 23. 3 | 24. 2 |
| 25. 2 | 26. 1 | 27. 3 |
| 28. 2 | 29. 3 | 30. 1 |
| 31. IV | 32. II | 33. V |
| 34. I | 35. III | 36. 2 |
| 37. 2 | 38. 2 | 39. 3 |
| 40. 2 | புள்ளி 40x2 1/2=100 | |

### வினாத்தாள்-2

01. இராப்பொழுது
02. நிலவை
03. தங்கத்தட்டுக்கு தங்கையின் முகத்திற்கு
04. அலைகள் 05. தங்கை
06. அல்லி 07. வதனம்
08. ஆழி,சாகரம்
09. பொய்கை,தடாகம்
10. திரைகள் 11. அழுகை
12. கவலை/துக்கம்
13. Sky 14. Clouds
15. Pond 16. Face
17. 100 18. 4086
19. கனவுரு 20. 150ml
21. $\frac{1}{8}$ 22. நாதஸ்வரம்
23. வயலின் 24. வீணை
25. புல்லாங்குழல்
26. இறுக்கமாக
27. ஸ ரி க ம ப த நி
28. நாதஸ்வரம்
29. மூங்கில் குழாய்
30. 2 31. 4
32. 3 33. 3
34. 4 35. கும்மி
36. காய்ச்சல் 37. சுக்கிரன்
38. செவுள் 39. காவோலை
40. 2 41. 4
42. 1 43. 1
44. 3 45. மின்காந்தம்
46. காற்றுத்திசைகாட்டி
47. மழைமானி 48. கப்பி
49. ✓ 50. ×
51. × 52. ✓
53. × 54. 750ml
55. 350c.m. 56. ரூபா 305.50
57. ரூபா 32.50 58. 500g
59. 14 60. 9 தடவை
61. 2 62. 1
63.3
64. புல்லும் ஆயுதம்
65. ஆமை
66. கிழிக்கின்றான் 67. சதை
68. (1)ள (2) ழ (3) ல
69. கதிரை 70. மேசை
71. துணி 72. புத்தகங்கள்
73. கரும்பலகை 74. போத்தல்கள்
75-80 கருத்துடைய வசனங்கள்

### புள்ளித்திட்டம்

| | | |
|---|---|---|
| 1-16 | - | 16 புள்ளி |
| 17-21 | - | 10 புள்ளி |
| 22-53 | - | 32 புள்ளி |
| 54-60 | - | 14 புள்ளி |
| 61-74 | - | 16 புள்ளி |
| 75-80 | - | 12 புள்ளி |
| | | 100 புள்ளி |

# 31ஆம் நாள் நீங்காத நினைவஞ்சலி

மலர்வு 19 - 11 - 1959



உதிர்வு 26 - 09 - 2003

## திருமதி சாரதாதேவி ஈஸ்வரோதயம் (ரதி)

எமது உடன்பிறவாச் சகோதரியே!
உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*நந்தாவில் வீதி,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*
*மருதடி வீதி, நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (24058) (26-29-13-16)

க.தர்மேஸ்வரன் குடும்பம்,
மா.இராசேஸ்வரன் குடும்பம்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 01 - 01 - 1938



மறைவு 26 - 09 - 2003

அமரர்

## வைரமுத்து மார்க்கண்டு

*அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்*
*பண்பின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்திட்ட அன்புத் தந்தையே!*
*உங்கள் பிரிவைத் தாங்க முடியாமல்*
*நாம் இங்கு தவிக்கின்றோம் தந்தையே!*

இன்று (26-10-2003) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் அன்புத தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி - பவளம்.
*தொட்டிலடி,*
*சண்டிலிப்பாய்.* (24061) (19-29-13-16)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சுந்தரம்பிள்ளை

சாவகச்சேரி, மடத்தடி மேற்கு வீதியினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுந்தரம்பிள்ளை நேற்று (25.10.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அருளம்மாவின் அன்புக் கணவரும் நடராசா, காலஞ்சென்ற சுப்பிரமணியம், இராசம்மா, காலஞ்சென்ற காசிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் இரஞ்சிதமலர், திரவியநாதன் (சுவிஸ்), இராசமலர் (சுவிஸ்), வசந்தமலர் (சுவிஸ்), சந்திரமலர் (பிரான்ஸ்), இராசகுமார் (பிரான்ஸ்), உதயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் குணசேகரம், சிவமதி (சுவிஸ்), ஈஸ்வரலிங்கம் (சுவிஸ்), பாஸ்கரன் (சுவிஸ்), சந்திரகுமார (பிரான்ஸ்), மோறியல் (பிரான்ஸ்), குலமகள் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கோபன் (சா.இ. கல்லூரி), இளங்கோபன் (சா.இ.ஆ. பாடசாலை), திலக்சன், கிசாந்தி, தமிழினி, செந்தூரன் றாஜினி, பிரவீனா, அஞ்சுகி, அருளினி, சம்பிள், அபிசன், அபிசா, தேயோ, மோனியா, மைவா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25-10-2003) சனிக்கிழமை பிற பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*"திருப்பரங்குன்றம்,"*
*மடத்தடி மேற்கு வீதி,*
*சாவகச்சேரி.* (24075) (-28-13-16)
தகவல்:
சி. குணசேகரம்
(மருமகன்)

## திருமதி கணபதிப்பிள்ளை மாணிக்கம்

கோப்பாய் தெறணைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை மாணிக்கம் அவர்கள் நேற்று (25-10-2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் லீலாவதி, குணசீலன், அருந்ததி, கலாவதி, தயாளசீலன், கருணாவதி (யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசப்பா, ரஞ்சிதாதேவி (யாழ் போதனா வைத்தியசாலை), செல்லத்துரை, விஜயகாந்தன், நாகராசா (கோப்பாய் அரசினர் வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் சதானந்தன், சத்தியகாந்தி, கஜேந்திரன், மதியழகன், ஜீவராணி, அருட்செல்வி, விஷ்ணுகரன் (கனடா), ருடராணி (கனடா), சிவரூபன், சிவதர்சினி, அபிராமி, ஷஜிதா, குமரன், பிரபு ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் உஷாந்தன், ஜசிதா, கனிஸ்ரா, கௌசிகன், கனிஸ்ரன், யதுஷன் (கனடா), மதுரங்கன், நிஷாந்தினி ஆகியோரின் அன்பு பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-10-2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கிழவானை ஒழுங்கை,*
*கோப்பாய் தெற்கு, கோப்பாய்.* (24068) (35-29-13-16)
தகவல்:
பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி

## குகதாசக்குருக்கள் நாகலட்சுமி அம்மா

மலர்வு : 31-12-1946 | உதிர்வு : 05-11-2002

திதி : ஐப்பசித்திங்கள் வளர்பிரதமை 26.10.2003

பாசத்துடன் எம்மைப் பேணிக்காத்து
பார்புகழ வைத்தீரே!
பொல்லாத பிணியில் வீழ்ந்த போதிலும்
பணிவிடைகள் செய்யக் காத்திருந்தோம்
பெற்ற கடன் தீர்க்கும் முன்
பிரிந்து சென்றீர் பரமனடிக்கே
பாவியர் நாம் பரிதவித்து நிற்கின்றோம்
பாசத்துடனே எம்மிடமே
மீண்டும் வாரும் அம்மா.

மகன்மார் :
சசிசேகர சர்மா (பிரான்ஸ்)
மதிவதனசர்மா (கல்வியங்காடு)

உயரப்புலம், ஆனைக்கோட்டை.

(C/30771) UTHAYAN Graphics

## வேலையாள் தேவை

எமது நிறுவனத்துக்கு வேலை செய்வதற்கு இருபாலாரும் நேரில் வரவும்.

தொடர்பு:
யாழ். போன் சொப்,
இல. 10 மேல்மாடி,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(24074)(31-30-17-16)

---

சுய தொழில்களுக்குத் தேவையான

ஐஸ்கிறீம், பொப கோர்ன், கேண்டிப் கிளாஸி போன்ற பல சுவையுணவு தயாரிப்பு இயந்திரங்களை வாங்குவதற்கு நாடுங்கள்.

**கெட்லங்கா லிமிட்டட்**
252, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொ/பே. 2459734-6. பக்ஸ். 2469738
(C/30764) (29)

---

# சமய சந்நிதிகளில்

• அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9மணிக்கு கந்த புராணபடிப்பு ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக் கிழமை இரவு 7மணிக்கு சூரசங்காரமும் மறுநாள் காலை 5.30மணிக்கு விசேட அபிஷேகமும் ,மாலை 6 மணிக்கு ஆறுமுகசுவாமியின் திருக்கல்யாணமும் இடம்பெறும். (எ-6)

★ ★ ★

பண்டத்தரிப்பு காலையடி முருக மூர்த்தி ஆலயத்தில் இன்று ஞயிற்றுக் கிழமை கந்தசஷ்டி உற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து ஆறுதினங்கள் நடைபெறவுள்ளது. (எ-10-135)

★ ★ ★

பிரான்பற்று முருகமூர்த்தி ஆலயத்தில் கந்தசஷ்டி உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து ஆறுதினங்கள் நடைபெறவுள்ளது. தினமும் விஷேட பூசை, அபிஷேகம் மற்றும் வழிபாடுகள் இடம்பெறும். (எ-10-135)

★ ★ ★

பொலிகண்டி கந்தவனம் சுப்பிரமணிய சுவாமி கோவில் கந்தசஷ்டி மகோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 6 தினங்கள் நடைபெறும்.

இம்மகோற்சவத்தில் நாளை திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு சூரன் திக்கு விஜயம் மறுநாள் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு தாரகன் போர், அதற்கு அடுத்தநாள் 29 ஆம் திகதி புதன்கிழமை சிங்கன போர் உற்சவம் என்பன இடம்பெறும்.

எதிர்வரும் 30ஆம் திகதி வியாழக் கிழமை மாலை 7 மணிக்கு சூரன்போர் உற்சவம் நடைபெற்று மறுநாள் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவத்துடன் மஹோற்சவம் நிறைவுபெறும் (எ-10-173)

★ ★ ★

அரியாலை புனித யூதா ததேயூ ஆலயத்திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வரை தொடர்ச்சியாக மூன்று நாளகள் நடைபெறவுள்ளது.

இன்று மாலை 5.30 மணிக்கு உற்சவ ஆராதனையும் திருப்பலியும் நாளை திங்கட்கிழமை மலை 5.30 மணிக்கு நற்கருணை ஆராதனையும் திருப்பலியும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு திருவிழா கூட்டுத் திருப்பலியும், திருச்சொரூப ஆசீரும் இடம்பெறும். (எ-7)

---

## விற்பனையாளர்கள் தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழகவிரும்புபவர்களும் தேவை.

தொடர்பு:
த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்,
44,42, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
(24072)

---

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதினத்தில் வெளியாகிய

சேதுபுகழ் விக்ரம், சூர்யா, லைலா நடித்த



**பிதாமகன்**

காட்சிகள் : 10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
ஆசனங்களை முன்பதிவு செய்துகொள்ளலாம்.
(C-23904) (30)

---

## விற்பனையாளர்கள் தேவை

கண்ணாடி வியாபாரத்தில் அனுபவமுள்ளவர்களும், பழக விரும்புவர்களும் தேவை.

தொடர்பு:
த.குமாரசாமி அன்சன்ஸ்,
218/1, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(24071)

---

**லிபேட்டி** அச்சுவேலி

சேரன், ரதி, மணிவண்ணன நடித்த

**சொல்ல மறந்த கதை**

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00.
(C/30851)

---

**நிறைஞ்சனாஸ்**

ஜீவா, ஸ்ரீதேவி நடித்த

**தித்திக்குதே**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு

T.DOX

---

## காணி விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு, கோப்பாய் பூதர்மடம், பருத்தித்துறை பிரதான வீதியின் அருகில் 08 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு:-
NO-28/12, மணத்தரைவீதி,
கந்தர்மடம்.
(24070) (35-13-16-30)

---

**லஷ்சுமி சினிமா** இணுவில்

சரத்குமார் (இருவேடம்), கிரண், வடிவேல் நடித்த



**திவான்**

காட்சிநேரம்: 10.30.3.00. 7.00. (பி.நே.)
(24067) (30-13-16)

---

**நாகம்ஸ்** சுன்னாகம்

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தினத்தில் வெளியாகிய

இளைய தளபதி விஜய், ஜோதிகா, கிரண் நடித்த



**திருமலை**

காட்சி நேரம் : 11.00, 3.00, 7.00, 10.00, (பி.நே.)
ஆசனங்களை பின்வரும் இடங்களில் பதிவுசெய்யலாம்.

| ரட்ணம்ஸ் பாட்டா | நாகம்ஸ் பாட்டா |
|---|---|
| 49, கஸ்தூரியார் வீதி, யாழ். | சுன்னாகம். |
| T.P.: 021-222 2917. | 060 221 2779. |

---

## VESTA

## உடன் வேலை வாய்ப்பு

எமது தொழிற்சாலையில் வேலை செய்ய பெண்பிள்ளைகள் தேவை. 27.10.2003 திங்கட்கிழமை நேரில் சமுகம் அளிக்கவும்.

*நேரம்: காலை 9.00 - மாலை 4.00 வரை.*

**வெஸ்ரா இன்டஸ்ரீஸ்,**
குளப்பிட்டி றோட்,
உயரப்புலம், ஆனைக்கோட்டை.
(24068)(26-30-13-36)

---

## இலவச e.mail @internet Connection



இன்றிலிருந்து எம்மிடம் கொள்வனவு செய்யப்படும் கணனிகளிற்கு இலவசமாக e.mail, Internet connection பொருத்தப்படும். இச்சலுகை 05-11-2003 வரை

அதிநவீன கணனிகளை பலவருட உத்தரவாதத்துடன் மிகக் குறைந்த விலையில் பெற்று உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்

STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam, Jaffna
T.P 021 222 2674, email stpedu@sltnet.lk

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 02 – 12– 1945



மறைவு 26 – 09 – 2003

அமரர்

## கணபதி கந்தசாமி

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்தீர்
மனிதருள் மாணிக்கமாய் மாண்புடன் திகழ்ந்தீர்
உங்கள் நினைவுடனேயே இப்பூவுலகில் வாழ்கின்றோம்
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வம் மறைந்த செய்தி கேட்டு எமது இல்லம் நாடிவந்து அனுதாபந்தெரிவித்தோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோர்க்கும், மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்திய பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும், தபால், தந்தி, தொலைபேசி மூலம் வெளிநாடுகளிலிருந்து ஆறுதல் கூறியோருக்கும், அனுதாபச்செய்தி அனுப்பிய புனித சவேரியார் பெண்கள் கல்லூரி,-மன்னார் அதிபர், ஆசிரியர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரம் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (26.10.2003) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

- பிரிவால் துயருறும் -
அன்பு மனைவி: குணலட்சுமி
பிள்ளைகள்: விஜிதா, நர்மதா, நிவேதிதா, விஜிகரன்.

மானிப்பாய் வடகிழக்கு,
மானிப்பாய்.

(24076)(31-30-36-13)

---

## புதிய அறிமுகம்



கொம்பியூட்டர் உலகில் முதன்முறையாக இலங்கையில் ஒரு கொம்பியூட்டரில் 3 இலிருந்து 7 வரை **CD Writer**களில் ஒரே நேரத்தில் பதிவு செய்யக்கூடிய முறையில் **Assample** செய்து தரப்படும். 1 மணித்தியாலயத்தில் 30 தொடக்கம் 84 வரையான **CD**களை பதிவு செய்து கொள்ளலாம்.

**Write Kit 003 3in One - P4**

● 1.7 GHz Intel Celeron Processor ● 256 Mb DDR Memory ● 32 Mb VGA 2D/3D ● 40 GB HDD Maxtar ● 1.44 Floppy ● 15" LG Colour, Monitor ● ATX Casing 300W, P4 Mercury ● Speaker, Keyboard, Mouse, Mousepad, screen Filter, 3X52X24X52 CD Writer With All Softwares, All Inclusive 57,000/= (one Year Warranty Upgradable upto 7 Writers).

Siva Computers & Electronics, 144/2-3 1st Cross Street Colombo - 11.
Tel : 2385177, Fax - 94-74-713674, Mobile - 0777-577854, 0777-373314.
E.Mail - Siva COM @ Slt net.lk.
(சி-30998) (30-17-16)

---

## திருமண அழைப்பு

உ

அன்புடையீர்! நிகழும் மங்களகரமான சுபானு வருடம் ஐப்பசித்திங்கள் 12ஆம் நாள் (29.10.2003) புதன்கிழமை தனுலக்கினமும் அதிதி யோகமும் கூடிய பகல் 9.30 மணிமுதல் 11.00 மணிவரையுள்ள (புதிய நேரம்) சுபமுகூர்த்த வேளையில்,

| எங்கள் கனிஷ்ட புத்திரன் | எங்கள் செல்வப் புதல்வி |
|---|---|
| திருவளர் செல்வன் | திருவளர் செல்வி |
| **ரவீகரன்** | **உமாவதி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் திருவருள் துணைகொண்டு யாழ்ப்பாணம். ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஸ்ரீ லக்ஷ்மி நாராயணன் கல்யாண மண்டபத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சமேதரராக வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்து, தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:**

| திருமதி இராசமலர் கந்தையா | திரு.திருமதி. கந்தையா |
|---|---|
| 32, பேரின்பநாயகம், ஒழுங்கை, | மட்டுவில் வடக்கு, |
| சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். | மட்டுவில், சாவகச்சேரி. |

*குறிப்பு:-* இத்திருமணம் முன்னர் 10.09.2003 இல் நடைபெற இருந்து தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டு இப்போது நடைபெறுவதனால் முன்னர் அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் ஏனையோரும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(24056) UTHAYAN Graphics

---

mini INFOTEL LANKA 2003 JAFFNA

## மாபெரும் கணனிக் கண்காட்சி

**இன்று வரை மட்டுமே!** தவறவிடாதீர்கள்.

கொழும்பில் இருந்து பல முன்னணி கனனி நிறுவனங்கள் பங்குபற்றுகின்றன.

*காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை.*

(சி-30777) (30-17-16)

# மலையக மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இனப்பிரச்சினை தீர்வில் மலையக மக்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற மலையக மக்கள் முன்னணியின் நிலைப்பாடு கோரிக்கை நிறைவேறி இருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகத் திட்டம் பற்றி ஆலோசனை சம்பந்தமாக கலந்துரையாட மலையக தலைவர்களையும் அழைத்து இருப்பது மலையக மக்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.

சமாதானப் பேச்சுகளில் மலையக மக்களுக்கும் இடமளிக்கவேண்டும் என்று மலையக மக்கள் முன்னணி கோரிவந்தமைக்குக் காரணம், தேசிய இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வுத் திட்டம் வரும்போது அதில் மலையக மக்களின் பிரச்சினைகளும் உள்ளடக்கப்பட்டு ஒரேயடியாக சகல பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுவிட வேண்டும் என்பதுதான். அவ்வாறான தீர்வில் சமூகங்களுக்கு இடையிலான பரஸ்பர உறவுகளை சீரான முறையில் பேண முடியும்.

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளும் மலையகத்தில் பல்வேறு பகுதிகளில் செறிந்து வாழும் மக்களின் பிரச்சினைகளும் வித்தியாசமானவை. மலையக மக்கள் பெரும்பான்மை மக்களுடன் புவியியல் ரீதியாக இணைந்து வாழவேண்டிய சூழ்நிலையில் உள்ளனர்.

ஆனால், 'தேசிய நீரோட்டத்தில் இணைந்துள்ள ஓர் இனம் என்ற வகையில் இரண்டு தரப்பினரும் சில முக்கியமான பிரச்சினைகளில் இணைந்து செயற்படுவது இன்றியமையாதது. தமிழ்மக்களின் பொதுவான பிரச்சினைகளில் இணைந்தும் பிரதேச ரீதியான பிரச்சினைகளில் தனித்தும் செயற்பட வேண்டியதும் அவசியமானதாகும்.

வன்னியில் இன்று நடைபெற இருக்கும் கலந்துரையாடல் மேற்குறிப்பிட்ட விடயங்களில் பல தெளிவுகளை ஏற்படுத்தும் என்பதும், மலையக மக்களின் அரசியல் அதிகாரம் பற்றிய கொள்கைகள் சரியான திசையில் செல்வதற்கான சில கொள்கைகளுக்கு இடமளிக்கும் என்பதும் எமது நம்பிக்கை - என்றுள்ளது. (ம-3)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

31ஆம் திகதி வரைவைக் கையளித்த பின்னர் நோர்வேத் தரப்பு அந்த வரைவை லண்டனில் வைத்து ஹக்கீமிடம் கையளிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதிகாரப் பரவலாக்கல், சமஷ்டி ஆட்சிமுறை, மாநில பொலீஸ் அமைப்பு ஆகிய விடயங்கள் குறித்து இந்தக் குழு இங்கிலாந்து, அயர்லாந்து நாடுகளின் அரசியல் நிபுணர்களுடன் கலந்துரையாடும். (ம-3-12)

**Certified Accounting Technologist**
**CAT**
**Accounting &Information Technology**

ஒரு வருடத்தில் நீங்களும் ஒரு கணனியுடான
கணக்கியல் வல்லுநராக CAT உடன் இணைந்திருங்கள்.

அடிப்படைத் தகைமை : G.C.E O/L 5 Passes or A/L 2 Passes
Medium English & Tamil.

2004 June Exam Batch உரிய விரிவுரைகள் 29.11.2003 இல் ஆரம்பம்.
2004 June aat Batch உரிய Stage I,II&III உரிய அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

*அலுவலக நேரம் :*
திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு 10.00 a.m. - 2.00 p.m.

**Career.com Institute,**
*No.79, Main Street, Jaffna.* (C/30772) (22-13-33)

**நாட்டிய மயில் - 2003**

முதன்முறையாக அகில இலங்கை ரீதியில் அறிமுகமாகவுள்ள நாட்டிய மயில் பரதநாட்டிய போட்டி நிகழ்வு எதிர்வரும் மார்கழி' மாதம் நடத்தப்படவுள்ளது. 18 வயதுக்கும் 28 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம். போட்டிக்கான கருப்பொருள் வர்ணம் (25 நிமிடங்கள்). உருப்படி தமிழில் அமைதல் அவசியமானது.

பங்குபெற விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை 16-11-2003 ஞாயிற்றுக்கிழமையன்று அல்லது அதற்கு முன்பாக கிடைக்கும்படி கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

*முகவரி:-*
**Mrs. Relanghi Selvarajah**
**Managing Director,**
**M.T.S. International Travels & Tours.**
**108A, Sea Street, Col-11.**

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

முழுப்பெயர் :-
முகவரி :-
தொலைபேசி :-
பிறந்த திகதி :-
(பிறப்புச்சான்றிதழ் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

16-11-2003 அன்று வயது :-
தேசிய அடையாள அட்டை இல. :-

ஆசிரியரின் அத்தாட்சிக் கையொப்பம் ........ விண்ணப்பதாரியின் கையொப்பம் ........

# அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கல்வி அபிவிருத்தி தொடர்பான முக்கிய கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை முதல் கோட்ட ரீதியாக இடம்பெறவுள்ளது.

நல்லூர் கோட்டத்துக்கான கலந்துரையாடல் நாளை பி.ப. 2மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியிலும் -

யாழ்.கோட்டத்துக்கான கலந்துரையாடல் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியிலும் -

கோப்பாய் கோட்டத்துக்கான கலந்துரையாடல் புதன்கிழமை பிற்பகல் 2மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் - இடம்பெறவுள்ளன. (ம-3)

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை வழங்கினேன். அவற்றை நிறைவேற்றி வைக்கமுடியாத நிலையில் உள்ளேன் என்ற கவலை எனக்குண்டு.

முக்கியமாக கடந்தகால யுத்தத்தின்போது தமது கைத்தொழில்களை முற்றாக இழந்தவர்களுக்கு உதவ முடியாத நிலையில் உள்ளதையிட்டு நான் கவலை அடைந்துள்ளேன்.

வங்கிகளில் கடன் பெற்று, கைத்தொழிலை மேற்கொண்டு யுத்தத்தால் அக்கைத்தொழில்களை முற்றாக இழந்தவர்கள் மீளக்கைத்தொழிலை ஆரம்பிக்க வங்கிக்கடனைப் பெறமுடியாத நிலை உள்ளது. அவர்கள் தொடர்பாக அரசுடன் பேசினேன். ஆனால், அந்தப் பிரச்சினைக்கு இன்னமும் தீர்வுகாண முடியாதுள்ளது.

குடாநாட்டில் 20 விதவைப் பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்த பயிற்சிகளை அளித்து வருகின்றோம். அடுத்தகட்டமாக 102 பேருக்கு பயிற்சி அளிக்க இருக்கின்றோம்.

புதிய கைத்தொழில்கள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்ட ஆவணங்களை தமிழில் மொழிபெயர்த்து வருகின்றோம். விரைவில் அவற்றை அச்சிட்டு வழங்கவிருக்கிறோம் - என்றார் அவர்.

நாளைய கலந்துரையாடல் யாழ் வீடமைப்பு அதிகார சபையின் கட்டடத் தொகுதியில் இயங்கும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (ம-3)

## மினிபஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தப்பிஓடிய மினிபஸ்ஸின் சாரதியை நேற்று கைதுசெய்த வட்டுக்கோட்டைப் பொலீஸார் அவரை மல்லாகம் நீதிவான் முன் ஆஜர் செய்தனர். எதிர்வரும் 4ஆம் திகதிவரை சாரதியை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவத்தின் எதிரொலியாக பண்ணாகம் ஊடான மினிபஸ் சேவையை நடத்துவதற்கு பொது மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால், அந்தப் பாதையூடான மினிபஸ் சேவை நேற்று இடம்பெறவில்லை.

'குறித்த மினிபஸ் சாரதி மது போதையில் இருந்ததாகவும், அவரிடம் மினிபஸ் செலுத்துவதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை என்றும் வட்டுக்கோட்டை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ. விஜயவீர தெரிவித்தார். குறித்த மினிபஸ் தற்போது பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது. (ம-3-29)

**வடமராட்சி, யாழ். - கொழும்பு பயணிகள் வான் சேவை**
நேரடியாகவும் தொலைபேசி மூலமும் ஆசனப் பதிவு செய்யலாம்.
வாடிக்கையாளர் கட்டணம் 900/=
ஜேயா ட்ரான்ஸ்போட் & கொமினிகேசன்
கொடிகாமம் வீதி, நெல்லியடி, தொ.இ:021-226-3500
JEYA COMMUNICATION, COLOMBO-13
Tel:01-2478444, 01-2478443, 077-271478
லொறி மூலம் பொருள்களை அனுப்பலாம்.

# 'புனிதர்கள் போர்' இன்று

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இளவாலை ஹென்றியரசர் கல்லூரிக்கும் இடையேயான 'புனிதர்கள் போர்' என வர்ணிக்கப்படும் உதைபந்தாட்ட மோதல் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.15 மணியளவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் 14 வயது, 16வயது, 18 வயது மற்றும் 20 வயதுக்குட்பட்ட உதைபந்தாட்ட அணிகள் மோதுகின்றன.

## சுதந்திரமாக தொழில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை உடைப்போம்", "இராணுவமே உன் வீட்டுக்குப்போ", "எங்கள் கடலுக்கு நீங்கள் அனுமதியா", "புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இயல்புநிலை, ஆனால் மக்களோ இராணுவத்தால் அவல வாழ்க்கை", "படகை உடைத்தது இராணுவமே", "எங்களின் கடலிலே எவர் எம்மைத் தடுப்பது" - என்ற கோஷங்கள் பேரணியில் எழுப்பப்பட்டன. இத்தகைய சுலோகங்கள் எழுதப்பட்ட அட்டைகளையும் பேரணியில் கலந்துகொண்டோர் தாங்கியிருந்தனர்.

காலை 9.30 மணிக்கு ஆர்ப்பாட்டப் பேரணி பிரதேச செயலகத்தை வந்தடைந்ததும் சுமார் 2மணி நேரம் மறியல் போராட்டம் நடைபெற்றது. போராட்ட முடிவில் அரச அதிபருக்கு அனுப்பிவைப்பதற்காக பிரதேச செயலாளர் ஆ.சிவசுவாமியிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. மகஜரின் பிரதிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, மனித உரிமை ஆணைக்குழு ஆகியவற்றின் அதிகாரிகளுக்கும், எம்.பிக்களான மாவை சேனாதிராஜா, எம்.கே சிவாஜிலிங்கம் ஆகியோருக்கும் கையளிக்கப்பட்டன.

போராட்டத்தையொட்டி பருத்தித்துறை நகரில் முற்பகல் 11 மணி வரை கடைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. பஸ்கள், மினி வான்கள் அந்நேரத்தில் பருத்தித்துறை பிரதான வீதியூடான சேவைகளை நிறுத்தியிருந்தன. பருத்தித்துறை பொலீஸார் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளும், மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளும் அங்கு சமுகமளித்திருந்தனர்.

மகஜரைப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலாளர் ஆ.சிவசுவாமி மகஜர் குறித்து அரச அதிபரிடம் பேசி உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

பெரும் எண்ணிக்கையான பொலீஸார் பேரணியில் சென்றவர்களுக்கு பாதுகாப்பு வழங்கிய அதேநேரம், இராணுவ காவலரண்களில் படையினர் குவிக்கப்பட்டு தயார்நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். (ம-3-15-70-173)

## மீனவர்கள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்கள் தொழிலை மேற்கொள்ள தமிழ்மொழி பேசக்கூடிய பொலீஸார் கண்காணிப்பிலும் ரோந்திலும் ஈடுபடுவர். இது தொடர்பான உத்தரவு இராணுவத் தளபதி, பொலீஸ்மா அதிபர் ஆகியோருக்கு விடுக்கப்பட்டுள்ளது.

படையினர் மீனவர்களைத் தாக்கியது தொடர்பான குற்றச்சாட்டுக் குறித்து பொலீஸார் உடனடி விசாரணை மேற்கொள்ளவேண்டும். குற்றச்சாட்டு உண்மை என நிரூபிக்கப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும். இது தொடர்பான உத்தரவு இராணுவத் தளபதி மற்றும் பொலீஸ்மா அதிபருக்கும் விடுக்கப்பட்டுள்ளது.

மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் 'பாஸ்' பரிசோதனை நடவடிக்கைகளில் பொலீஸாரை ஈடுபடுத்துவது குறித்தும் பரிசீலிக்கப்படும் - என்று ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்ததாக மாவை சேனாதிராஜா எம்.பி. கூறினார். (ம-3)

**மரண அறிவித்தல்**

**திருமதி லூட்ஸ் சந்தியாகோ**
**(இளைப்பாறிய ஆசிரியை)**

பலாலியைப் பிறப்பிடமாகவும் 544,நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லூட்ஸ் சந்தியாகோ நேற்று (25.10.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி பிலேந்திரம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஜோன் சந்தியாகோவின் அன்பு மனைவியும் ஷிரோமி (செல்வா), மொய்றா (ஜெயந்தா-கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீபன் லெனாட் (நியூ லங்கா டிரேடர்ஸ் (பி) லிமிட்டெட்), ஜோஷின் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜோசப் பிலேந்திரம் (லண்டன்), ஜேன் பரோ (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஸ்ரெபனி (வேம்படி மகளிர் கல்லூரி), லெறிக்கா (புனித ஜோண் பொஸ்கோ வித்), கெவின், ஜோய் (கனடா), ஜோஷ்வா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*544, நாவலர் வீதி,*
*(ஸ்ரான்லி கல்லூரி அருகில்) யாழ்ப்பாணம்.*
T.P: 021 222 5294

தகவல்:
ஸ்ரீபன் லெனாட்,
ஜேன் பரோ.

(24279) (29-13-47)

**OBITUARY**

**Mrs. Lourdes Santiago**

Mrs.Lourdes Santiago-Retired teacher of 544, Navalar Road, Jaffna, Passed away peacefully In the Jaffna Hospital on October 25, 2003 at 8.50 p.m.

She is the loving wife of the late John Santiago and the loving daugher of Mr. and Mrs. Pilendiram(Both deceased)

She leaves behind two daughters Shiromi and Moira (Canada) and their Husbands Stephen Leonard(New Lanka Traders(Pvt)Ltd.), Joseph Parusthy(Canada)and Grand Children Stephanie, Lyrica, Kevin and Joy,Joshua she is the Loving sister of Joseph Pilendiram(UK) and Jane Barrow(Australia). Sleep in peace funeral arrangements will be notified later.

*544, Navalar Road,*
*(Near Stanley College)*
*Jaffna.*
*T.P. No.: 021 2225294*

Stephen Leonard,
Jane Barrow

(24078) (36-13-17)




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.10.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.